1159

வருட சந்தா ரு. 3 Rgd. No. M. 2419



# மாத்வமித்திரன்.

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமி தோறும்வெளிவரும்







| | | |
|---|---|---|
| Vol. 3 | ப்ரஜோத்பத்தி ஸம்வத்ஸரம் | No 10 |
| | ஜ்யேஷ்ட மாஸம் | |
| புஸ்தகம் 3 | பௌர்ணமி (31—5—31) | நெ 10 |



பொருளடக்கம்.



| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீதாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 289 |
| 2. | ஷட்ப்ரச்ன உபநிஷத் | 297 |
| 3. | துவாதசஸ்தோத்திரம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 301 |
| 4. | அத்வைதிகளின் ஆத்திரம் | 305 |
| 5. | ஓர் விக்ஞாபனம் | 313 |
| 6. | செய்தித்திரட்டு | 315 |



ஆசிரியர்
பாகவத ரங்கநாதாசாரியார்.

# நான் யார் தெரியுமா?

நான் யார் என்றால், உங்களுடைய கிழத்தன்மையை ஒழித்து, தேகபுஷ்டியை கொடுக்கப்பட்டவன். போலி மருந்துகளை வாங்கி மோசம்போகாதீர்கள்.

என் பெயர்

## மதனமஞ்சரி மாத்திரை.

என்றுசொல்வார்கள். நான் அஜீரணத்தையும், மலச்சிக்கலையும் தேக அசதியையும் ஞாபகக்குறைவையும், இந்திரியஸ்கலிதமும், வேருடன் நாசமாக்கி தேக புஷ்டியையும், ஆரோக்கியத்தையும் கொடுக்கப்பட்டவன். நீங்கள் ஒருதரம்வாங்கிஉபயோகித்தால் இதன் உண்மையைதெரிந்துகொள்ளலாம்.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு விலை ரூ 1-0-0

**இனாம்! கேட்லாக் இனாம்!!**

மதனமஞ்சரி பார்மசி,
1/94 சைனாபஜார் ரோட், மதராஸ்.

---

தந்தி விலாசம்:—கிரேயான்ஸ். 1922ல் ஸ்தாபிதம்.

சென்னைக் கவர்னர் பாராட்டிய தொழிற்சாலை எது?

## நேஷனல் கிரேயான் ஒர்க்ஸ்

கும்பகோணம்.

இதில் பாடசாலைகளுக்குவேண்டிய பலவர்ண சாக்கட்டிகள், பிலியார்டு சாக்பீஸ்கள், சாக்கட்டியில் பிளாட்டிங் பேப்பர் வெயிட்டுகள் பென்சாக்குகள், இந்து ஆலய விக்ரகங்கள் முதலியவை வெகு அபூர்வமாகத்தயாரிக்கப்படுகின்றன. மெடல்களும் ஸர்டிபிகேட்டுகளும்பெற்றது, கவர்மெண்டாரால் ஆதரிக்கப்பெற்றது.

எங்கள் தொழிற்சாலையில் நவராத்திரியை உத்தேசித்து ஸ்பெஷலாக ஸ்ரீகணேசர், ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி, ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீஸரஸ்வதி முதலிய பிம்பங்கள் அழகாய் தயாரிலிருக்கின்றன. விபரம் மானேஜருக்கு ஒருஅணா தபால் பில்லை அனுப்பி தெரிந்து கொள்ளவும். விபரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.


ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் செய்தது)
(ஸ்ரீம. வே. பார்கவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு)
(காபி ரைட்)

### ஒன்பதாவது அத்தியாயம்

(முன் தொடர்ச்சி.)

கமலத்தினின்றும் உற்பன்னனான பிரம்மனே! நீ ஜகத்குருவாயிருக்க உனக்கு நான் வரத்தை அளித்திருக்கிறேன். குருவின் ஆக்ஞைப்படி நடந்தால்தான் ஜீவர்களுக்கு நற்கதி என்பதையும் நான் ஏற்படுத்தியிருக்கிறேன். ஆகையால் இந்த ஜீவர்களுக்கு என் ஆக்ஞையின்பேரில் நீதான் லோகங்களைத்தருவாய். என்மனதிலுள்ள அபிப்பிராயத்தை நீ ஒருவன்தான் எப்போதும் அறிந்திருக்கிறாய்." என்றிவ்வாறு சொல்லப்பட்ட ப்ரபுவான பிரம்மா பகவானுடைய அபிப்பிராயத்தை அறிந்து எறும்பு திருணம் இவை வரையிலுள்ள ஜீவர்களுக்கு, நித்யமாயிருப்பதன் நிமித்தம் ஸான்தானிகமெனப்படுவதாயும் விஷ்ணுவை எஜமானராகக்கொண்டதாயுமுள்ள லோகங்களைத்தந்தார். அந்த ஜீவர்கள் ஜனனமரணமில்லாதவர்களாய் எல்லா துக்கங்களுமற்றவர்களாய் ஸம்ஸாரமில்லாதவர்களாய் ஸ்வரூபானந்தம் வெளியாகி அதனால் சிரேஷ்டர்களாய் அந்த ஸான்தானிக லோகத்தில் வாசம் செய்தனர்.

எந்த தேவர்கள் மனுஷ்யர்களுடையவும் வானரர்களுடையவும் ரூபங்களுடன் பூமியில் பிறந்திருந்தனரோ அவர்கள் மைந்தத்விவதர்களைத் தவிர்த்து எல்லோரும் தம்தம் மூல ரூபங்களில் போய் ஐக்யமடைந்தனர். மைந்தத்விவதர்கள் அஸுராவேசத்தால் ஸ்ரீராமருடன் போகவில்லை. முன்னம் அவர்கள் அமிர்தபானம் செய்திருந்ததால் ஸ்ரீராமருடைய காலத்தில் அவர்கள் இறக்கவில்லை. இவர்கள் பிரம்மாவைக்குறித்து தவம் செய்தனர். பிரம்மா சந்தோஷமடைந்து உங்களுக்கு கிழத்தனமும், மரணமும் வேண்டாமென்று வரத்தைக்கொடுத்தார். அதனால் கர்வமடைந்து, தேவர்கள் அமிர்தபானம் செய்தபின் இவர்களிடம் ஒப்புவித்திருந்த அமிர்தத்தை பலாத்காரமாய் பானம் செய்துவிட்டனர். இதைக்கண்ட இந்திராதி தேவர்கள் இவர்கள் அசுவனீ தேவர்களின் அம்சங்கள்தானே என்று உபேக்ஷயாயிருந்தனர். தேவர்கள் அமிர்தபானம் செய்துவிட்டு தானவர்களுடன் யுத்தத்திற்காக போனகாலத்தில் இந்த வானரர்களின் கையில், மீதியுள்ள அமிர்தத்தைக் கொடுத்து இதைப் பத்திரமாய் வைத்திருங்களென்று ஒப்புவித்தனர். இந்த வானரங்கள் அதையும் சடுதியில் பானம் செய்துவிட்டனர். இந்ததோஷத்தால் அதிகமான அஸுராவேசத்தை இவர்கள் அடைந்தனர்.

அங்கதன் ஸ்ரீராமருடைய ஆக்ஞைப்படி குசனுடைய ஸஹாயத்தைக்கொண்டு வானர ராஜ்யத்தை ரக்ஷித்து காலாந்தரத்தில் சரீரத்தைவிட்டு சந்திரனுடைய ஸ்வரூபத்தை அடைந்தான் தர்மத்தில் புத்தியுள்ள விபீஷணன் குபேரனுக்கு ஸேனாதிபதியாக இருந்து ஸ்ரீராமருடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு பிரம்மாவின் ஓர் தினகல்பம்வரையில் ராக்ஷஸர்களை ஸம்ரக்ஷித்தான். ஜாம்பவான் ஸ்ரீராமருடைய ஆக்ஞையால் ஜாம்பவதி என்னும் புத்திரி தனக்குப் பிறக்கவேண்டுமென்று திவ்யமான தபஸ்ஸை செய்துகொண்டு பூமியில் வசித்திருந்தார்.

ரகுகுலதிலகரான ஸ்ரீராகவன் அந்தரிக்ஷலோகமேறியபின் தேவர்களால் பூஜிக்கப்பெற்றவராய் தம்முடைய ஒரு ரூபத்துடன்





ஸ்வர்க்கத்தில் வாசம்செய்தார். பிரம்மாவின் சபையில் பிரம்மாவால் பூஜிதராய் இரண்டாவது ரூபத்துடன் வசித்தார். வைகுண்டத்தில் மூன்றாவது ரூபத்துடன் வசித்தார். மூன்றாவது ரூபத்துடன் வைகுண்டத்திற்கு பிரயாணம் செய்த ஸ்ரீராமரை பிரம்மாதி தேவர்கள் பின் தொடர்ந்துபோய் அங்கு அவரவர்கள் போகமுடியாததான இடங்கள் வரையில் கிரமமாய்ச் சென்று ஸ்ரீராமர் கண்ணுக்கெட்டுகிறவரையிலும் நின்று அவரைக்கண்டுகொண்டிருந்து உரக்கஸ்தோத்திரம் செய்தனர். பிரம்மா, வாயு பகவான், வாயு புத்ரரான ஹனுமார், பரமசிவன், சேஷன், கருடன், மன்மதன், இந்திரன், தக்ஷப்ரஜேசுவரர் முதலானவர்கள் அவர்களின் யோக்யதைக் கிரமப்படி ஸ்ரீராமரை பின் தொடர்ந்துபோய் ஸ்ரீராமருடைய ஆக்ஞையை சிரஸாவகித்து, பின் திரும்பினர். இந்திராதிதேவர்கள் பிரம்மாவை முன்னிட்டுக்கொண்டு தம்தம் லோகத்திற்கு புறப்பட்டுப்போயினர். பிறகு வாயுகுமாரரான ஹனுமார் பதரிகாசிரமத்திற்குச் சென்று ஸ்ரீவியாஸரூபியான நாரயணருடைய பாதத்தை சேவித்தார். ஸமஸ்தசாஸ்திரார்த்த பூர்ணமான ஸ்ரீவேதவியாஸரின் வாக்யத்தை சந்தோஷத்துடன் செவியாற சிரவணம் செய்து தேவோத்தமர்களுக்கும் ரிஷிகளுக்கும் ஸதா பகவத் ஸ்வரூபத்தை தான் உபதேசம் செய்துகொண்டு ஸ்ரீஹனுமார் ஸுகமாய் வசித்துவந்தார். ஹனுமார் மற்றொரு ரூபத்தால் ஸ்ரீராமருடைய ஆக்ஞையின் பேரில் கிம்புருஷகண்டங்களில் ராஜ்யபாரம் செய்தார். மற்றும், பல ரூபங்களுடன் ஹனுமார் சுவேதத்வீபம், அநந்தாஸனம், வைகுண்டம் இவைகளில் சுயேச்சையாய் வாஸம் செய்தார். நாம் இதுவரை சொல்லிவந்தபடிக்கு ஸ்ரீஹனுமார் நூறுகோடி சுலோகங்களடங்கி விஸ்தாரமான மூல ராமாயணத்தையும், மகாபாரதம், பாஞ்சராத்திரம் இவைகளையும் கானம் செய்துகொண்டு பிரம்மசூத்திரங்கள் சேர்ந்த எல்லா வேதத்தையும் வியாக்யானம் செய்துகொண்டு இடைவிடாது நித்யஸுகபூர்ணராய் விளங்கினார். ஸ்ரீராமச்சந்திரனும், ஹனுமார், சீதை, லக்ஷ்மணர் முதலான தம்பிமார்கள் இவர்களுடன்கூடி கருடன் முதலான த்வாரபால

கர்களால் ஸேவிக்கப்பட்டவராய் க்ஷீர சமுத்திரத்திலுள்ள சுவேதத்வீபத்தில் வாசம் செய்தார். இப்படி சொல்லப்படுவதால் லக்ஷ்மணர் முதலியோர் அவரவர்களின் மூலரூபத்தை அடைந்திருந்தபோதிலும் அவர்கள் இச்சைப்பட்டு லக்ஷ்மணாதிரூபங்களை தரித்திருந்து மீண்டும் ஸ்ரீராமச்சந்திரனை ஸேவித்து வந்தனரென்று ஏற்படுகிறது. ஸர்வேசனான பகவான் ஓர்சமயம் எல்லா அவதாரங்களையும் ஒன்றாய் சேர்த்துவிட்டு அவருடைய இச்சையால் ஆதிசேஷன்மீது படுக்கிறார். ஒருசமயம் தம்முடைய இச்சையால் வாஸுதேவாதி அநந்த ரூபங்களை தனித்தனியாக பிரித்து ஒரேகும்பலாய்ச்செய்து அனந்த கல்யாண குணக்கடலராய் ரமாபதியான பகவான் விளையாடுகிறார்.

இவ்வாறு எல்லா புராணங்களினின்றும் பாஞ்சராத்திராகமத்தினின்றும், மஹாபாரதத்தினின்றும், எல்லா வேதங்களினின்றும், மூல ராமாயணத்தினின்றும் பரஸ்பரம் விருத்தமாயிருப்பவைகளை பரிகாரம் செய்து தத்வம் இதுதானென்று, யுக்தியாலும், என்னுடைய புத்தி பலத்தாலும், முக்யமாய் ஸ்ரீ விஷ்ணுவின் அனுக்ரஹத்தாலும், பல கல்பங்களில் நடந்தவைகளை அனுசரித்தும் நான் இந்த ஸ்ரீ ராம சரிதையை சொல்லியிருக்கிறேன். நான் ஒரே நூலை ஆதாரமாய்க்கொண்டு இந்த கதையைச் சொல்லவில்லை, ஆதலால் இது மற்றொரு கிரந்தத்திற்கு விருத்தமாயிருக்கிறதென்று ஸம்சயப்படவேண்டாம்.

இவ்வாறு ஏன் நிர்ணய கிரந்தம் செய்யப்பட்டதென்றால் மகாபாரதாதிகளில் சில இடங்களில் தைத்யர்களை மோகிக்கும்பொருட்டு காலத்தை வித்தியாஸமாயும், ஆசாமிகளை வித்தியாஸமாயும் சொல்லியிருக்கின்றனர். ஓரிடத்தில் ஒரு அர்த்தம் சொல்ல வேண்டியதிருக்க அதற்கு மாறாக அர்த்தம்சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் தான் தத்வம் இன்னது என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இதேவிதமாய் இனிசொல்லப்போகும் ஸ்ரீ வியாஸாவதாரம், ஸ்ரீகிருஷ்ணாவதாரம் முதலிய சரிதைகளில் ஓர் கிரந்தத்திற்கு விரோதமிருப்பதாய் சங்கிக்கத் தகுந்ததல்ல. நாம்





சொல்லியிருக்கும் சிருஷ்டி முதலிய பரம்பரையின் கிரமம் எல்லா கல்பங்களிலும் பொதுவானது. புராணாதிகளில் சில இடங்களில் ஆசாமிகளை வித்யாஸப்படுத்தி கதை சொல்லப்பட்டிருக்கிறது. பாண்டவர்கள் வனவாஸம் செய்யும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களை பார்க்கவந்த சமயம் துரௌபதிக்கு, அர்ஜுனனுடைய பாணங்களால் அடிபட்டு பிராணனை விட்ட துர்யோதனாதி நூறு பேர்களை காண்பிப்பதாய், பகவான் சொன்னதாக மகாபாரதம் ஆரண்யபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. துர்யோதனாதி நூறுபேர்கள் பீமசேனரால் மாண்டனரென்று அநேக வாக்யங்களால் தெரியவருகிறது. ஒரு க்ரந்தத்தில் அர்ஜுனனால் அவர்கள் இறந்தனரென்று இருக்கிறது. ஆயினும் அனேக க்ரந்தங்களில் பீமசேனரால் அவர்கள் மாண்டனரென்றிருப்பதால் அது தான் உண்மையென்று நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். மற்றும் பல கதைகள் ஆசாமிவித்யாஸங்களுடன் சொல்லப்பட்டிருக்கின்றன. பல க்ரந்தங்களில் ஸ்ரீ கிருஷ்ணரால் சம்ஹாரம் செய்யப்பட்டிருப்பதாய் சொல்லியுள்ள அஸுரர்களை ஓர் க்ரந்தத்தில் பலராமன் கொன்றதாய் சொல்லப்பட்டிருக்கிறது. சில இடங்களில் காலத்தின் வித்யாஸமும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணனின் முன்னிலையில் பீமசேனர் மயாஸுரனுடைய சபையில் துர்யோதனனை பரிஹஸித்ததாய் அநேக க்ரந்தங்களில் நிர்ணயம் செய்ததாய் தெரியவருகிறது. நிர்ணயம் செய்யக்கூடாததாயிருக்கும் க்ரந்தத்தில் துர்யோதனன் மயசபையை பிரவேசிக்கும்முன்பே ஸ்ரீகிருஷ்ணன் ஸால்வராஜனைக் கொல்லும்பொருட்டு புறப்பட்டுப் போனதாய் சொல்லப்பட்டிருக்கிறது. இவை முதலான வித்யாஸங்களும் ப்ராதிலோம்யாதிகளும் பாரதாதி க்ரந்தங்களில் காணப்படுகின்றன. இந்த வித்யாஸாதிகள் ஸ்ரீவியாஸரால் இயற்றப்பட்டுள்ள லக்ஷணக்ரந்தத்தாலும் பஹுக்ரந்தங்களின் வாக்யங்களாலும் நிர்ணயம் செய்யக்கூடியதாயுள்ள பிரம்ம ஸூத்ரம் முதலிய கிரந்தத்தாலும் தெரியவருகிறது. ஆகையால் நிர்ணயம்செய்யக்கூடிய கிரந்தங்களையும் லக்ஷண கிரந்தங்களையும் ஆதாரமாகக்கொண்டு அநேக வாக்யங்களை அனுஸரித்து நான் இந்த பகவதவதார நிர்ணயத்தை செய்திருக்கிறேன்.

ஸ்ரீ வேதவ்வியாஸர் இயற்றியுள்ள லக்ஷண சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது:— எவனொருவன் ஸமாதிபாஷை, தர்சனபாஷை, குஹ்யபாஷை, இவைகளின் லக்ஷணத்தை அறியானோ, நூறுவகையான ப்ரவசன ப்ரகாரங்களையும் வ்யத்யாஸாதி ஏழு பேதங்களையும் எவன் அறியானோ, அவன் வேதம் பாரதம் முதலிய புராணங்கள் இவைகளின் அர்த்தத்தை தனது புத்தியைக்கொண்டுமட்டில் சொன்னானென்றால் விபரீத ஞானத்தால் ஏற்படும் அந்தம் தமஸ்ஸையே அவன் அடைவான். இவ்வாறு வேறு லக்ஷணசாஸ்திரமல்லாத சாஸ்திரங்களிலும் அந்தந்த ப்ரகரணங்களில் ஸ்ரீவேதவியாஸர் நாம் சொல்லியுள்ள பல விஷயங்களை சொல்லியிருக்கிறார். வ்யத்யாஸம், ப்ராதிலோம்யம், கோமுத்ரீ, ப்ரகஸம், உக்ஷணம், ஸூதரம், ஸாது என்னும் ஏழு வகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வேழு பேதங்களின் லக்ஷணமின்னதென்பதை இந்த பகவதவதார கதா பிரஸங்கத்தில் நாம் சொல்லவில்லை அந்த லக்ஷணாதிசாஸ்திரத்தை அனுஸரித்து நாம் பகவதவதாரகதா நிர்ணயத்தைச் செய்திருக்கிறோம் ஆகையால் இந்த க்ரந்தம் நிர்ணயக க்ரந்தமானதால் நாம் இயற்றிய இந்த மகபாரததாத்பர்ய நிர்ணயமாகிய சாஸ்திரம் ஞானத்தை இச்சிப்பவர்களால் அவசியம் ஏற்றுக்கொள்ளத்தகுந்தது. எல்லாசாஸ்திரங்களை அனுசரித்து ஸம்ஸாரத்தைப் போக்குவதாயும் உத்தமமாயுமுள்ள ஸ்ரீராமசரிதையை இதுவரைசொல்லியிருக்கிறேன். இந்த சரிதையை அதிகாரியாயுள்ளவர்யார் படனம் செய்கிறாரோ அல்லது சிரவணம் செய்கிறாரோ அவர் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபட்டவராய் பகவானுடைய பாதஸமீபமாகிய மோக்ஷத்தை அடைவார்.

ஸ்ரீமத் ஆநந்ததீர்த்த பகவத்பாதாளியற்றிய
ஸ்ரீமகாபாரததாத்பரிய நிர்ணயத்தில் ஸ்ரீராமசரிதையில் உத்தரகாண்ட கதாநிரூபணமாகிய ஒன்
பதாவது அத்யாயம் முடிந்தது.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.





## பத்தாவது அத்யாயம்.

### அமிர்தமதன சரிதை.

இந்த வைஸ்வதமன்வந்தரத்தின் இருபத்தி எட்டாவது த்வாபரயுகம் ப்ராப்தமான பிறகும் கௌதம ரிஷியின் சாபத்தால் சாதுக்களின் ஞானம் கெட்டுப்போன பின்பும், பிரம்மா, ருத்திரன் இந்திரன் முதலான தேவர்கள் ஸாதுக்களிடம் கருணைகொண்டவர்களாய் க்ஷீரஸமுத்திரத்தின் கரைக்குச்சென்றனர். தேவ சிரேஷ்டர்கள் க்ஷீரஸமுத்திரத்தின் வடகரைக்குப்போய்ச் சேர்ந்து புருஷோத்தமனும் நாசமற்றவனும் புண்டரீகாக்ஷனுமான ஸ்ரீநாராயணனை ஸ்தோத்திரம் செய்தனர். "கணக்கற்ற குணங்களுக்கு முக்கிய ஆசிரயமாயும் எல்லாவற்றையும் அறிந்த விசேஷ ஞானமாகிய கிரணங்களால் பிரகாசிப்பவராயும் அநாதியான அக்ஞானமாகிய அந்தகாரத்தை நாசம் செய்பவராயும், பிரம்மாதி தேவர்களுக்கு நித்யமான ஆனந்த பதத்தைக்கொடுப்பவராயுமுள்ள உமக்கு நமஸ்காரம் நமஸ்காரம். பூர்வம் துர்வாஸ மகரிஷி இந்திரபகவானுக்கு வழியில்கொடுத்த எருக்கம் பூமாலையை மகேந்திரன் தான் அச்சமயம் ஏறிக்கொண்டிருந்த ஐராவதத்தின் கும்பஸ்தலத்தின் மீதுவைக்க ஐராவதம் அந்த மாலையை பூமியில் தள்ளிவிடவும் அதனால் கோபங்கொண்ட துர்வாஸர் மஹேந்திரனுக்கு அவனுடைய ஸ்வர்க்காதிபத்யம் போய்விடும்படி சாபம் கொடுக்கவும் உடனே அந்த சாபத்தால் இந்திராதிகள் அஸுரர்களால் தோல்வியடைந்து ஸ்வர்க்கத்தினின்றும் ப்ரஷ்டர்களாகினர். அச்சமயம் நாம் தங்களை சரணமடைந்தோம் ஹே பகவன்! தங்களுடைய ஆக்ஞைப்படி இந்த இந்திராதி தேவர்கள் பலிச்சக்கரவர்த்தியுடன் சிநேகம் செய்துகொண்டு ருத்திரனுடைய வரத்தால் இதரர்களால் அசைக்கமுடியாததான மந்தரகிரிக்கு அஸுரர்களுடன்வந்து அதைத் தூக்கஎத்தனப்பட்டும் அவர்களால் முடியவில்லை அச்சமயம் தாங்கள் ஒருகையா

லேயே மந்தரபர்வதத்தை உபரப்பிடுங்கி எடுத்து நித்யபலத்துட னிருப்பதால் அநந்தனென்று பெயர் பெற்ற கருடபகவானுடைய தோளின்மீது ஏற்றி வைத்தீர். அவர் தங்களையும் அந்த மலையையும்தூக்கிக்கொண்டு கிளம்பினார். [அஷ்டமஸ்கந்தம் ஸ்ரீமத்பாகவதத்தில் மந்தர பர்வதத்தை ஸுபர்ணன், (கருடன்) தூக்கிச் சென்றதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அநந்தன் தூக்கியதாய் ஆதிபர்வம் மகாபாரதம் அறிவிக்கிறது. ஸுபர்ணனாகிய கருடனுக்கே அநந்தனென்ற நாமமுண்டு என்று காட்டப்பட்டு பரஸ்பர விரோதம் பரிகாரம் செய்யப்பட்டது குறிப்பிடத்தகுந்தது. மேலும் பிரம்மாவின் ஓர்நாளில் ஆறாவது மன்வந்தரத்திலும் சரியே ஏழாவது மன்வந்தரத்திலும் சரியே அமிர்தமதனம் உண்டு, ஆறாவது மன்வந்தரத்தில் மந்தரபர்வதத்தைக்கொண்டு வந்த கருடனுக்கு ஸுபர்ணனென்றுபெயர். ஏழாவது மன்வந்தரத்தில் அம்மலையைத் தூக்கியவனுக்கு அநந்தனென்று பெயர் ஆறாவது மன்வந்தரத்தில் க்ஷீரஸமுத்திரத்தில் அமிர்தமதனம் நடந்தது. ஏழாவது மன்வந்தரத்திலோ லவண ஸமுத்திரத்தில் அமிர்தமதனம் நடந்தது. இந்த காரணங்களைக்கொண்டு மகாபாரதத்தில் சொல்லியுள்ள கதைக்கும் பாகவதத்தில் சொல்லியுள்ள கதைக்கும் முரண்பாடு ஏற்படுவதில்லை. இங்கு தாத்பர்ய நிர்ணயத்தில் சொல்லப்பட்டுள்ள கதை ஸ்ரீமத்பாகவதத்தை அனுசரித்ததெனத் தெரியவருகிறது.

அஸுரர்களுடனுள்ள தேவர்கள் தங்கள்பலத்தை பரீக்ஷித் தறிய கருடனுடைய தோளின் மீதுள்ள மந்தரமலையை தங்கள் கைகளைக்கொடுத்து இறக்கினார்கள். அந்தமலை ஸுவர்ணமயமானதால் மிகுந்த பளுவாயிருந்ததன் நிமித்தம் அவர்கள் அதைத் தாங்கமுடியாமல் விட்டுவிட அந்தமலை அந்த தேவாஸுரர்களின்மீது விழுந்து எல்லோரும் சுக்கல் சுக்கலாய்ப்போயினர். அப்பொழுது தாங்கள் அவர்களை கடாக்ஷிக்க அவர்கள் முன்போல் இடைப்பட்டு எழுந்துவிட்டனர்.

(தொடரும்.)





# ஷட்ப்ரச்ன உபநிஷத்.

## மூன்றாவது ப்ரச்னம்.

(முன் தொடர்ச்சி)

அந்த ரூபங்களால் எந்த எந்த காரியங்களைச் செய்கின்றனர்? சரீரத்தில் எந்த எந்த ஸ்தானத்தில் எந்த எந்த ரூபங்களுடனிருக்கிறார் என்று பிரச்னம். அவர் வெளிக்கிளம்பும் பொழுது எல்லோரும் கிளம்புகின்றனரென்று சொல்லப்பட்டது. அவர் எந்த விபாகத்தால் ஜீவனையும் தத்வாபிமானி முதலானவர்களையும் எடுத்துக்கொண்டு சரீரத்திலிருந்து கிளம்புகிறார்? இரண்டாவது ப்ரச்னம் ஏழாவது மந்திரத்தில் முக்யப்ராணரின் வசத்தில் ஸர்வமும் இருப்பதாய் சொல்லப்பட்டது. எந்த ரூபத்தால் பாஹ்யமான அதிபூதாதிகளை தரிக்கிறார்? அத்யாத்மர்களான தேவர்களையும் எப்படி தரிக்கிறார்? என்று பிரச்னம் செய்தார். (2) இவ்வாறு பிரச்னம் செய்யப்பட்ட பிப்பலாதர் அந்த ஆச்வலாயனருக்குப் பதில்சொன்னார் என்னவென்றால் ஹே ஆசுவலாயனரே! மிகவும் உத்தமமாயுள்ளதான கேட்க வேண்டிய விஷயங்களைக் கேட்கிறாய். ஆகையால் நீ வேதவிசாரதிகளைச் செய்கிறவனாயிருக்கிறாய். இல்லாவிடில் இவ்விதமான பிரச்னங்களைச் செய்யமுடியாது. நீ ப்ரம்மிஷ்டனாயிருப்பதால் நான் உனக்கு பதிலளிக்கிறேன். மேலே சொன்னபடி மகா மகாத்மியமுள்ளவராயிருப்பினும் முக்யப்ராணர் பரமாத்மாவிடமிருந்துதான் பிறக்கிறார். எப்படி என்றால் மனுஷ்யனுடைய நிழல் அவனுடைய சரீரத்தை ஆசிரயித்து அத்யந்தம் அந்த சரீரத்திற்கு ஆதீனமாக எப்படி இருக்கிறதோ அப்படி இந்த பரமாத்மாவிடம் முக்யப்ராணர் முதலான அத்யாத்மாதிகள் ஸர்வமும் ஆசிரயித்திருக்கின்றனர். முக்யப்ராணரைவிட பரமாத்மா பரமோத்தமமாயிருப்பதால் அந்த பரமாத்மாவிடமிருந்து முக்யப்ராணருக்கு உற்பத்தி ஏற்படுவது யுக்தம்தானாகும் இந்த

மானிட சரீரத்தில், ஞானரூபியாதலால் மனஸ்ஸென்ற பெயருள்ள பரமாத்மாவின் பிரேரணையால் முக்யப்ராணர் வந்திருக்கிறார். உலகில் ஓர்சக்ரவர்த்தி அவனுடைய சிற்றரசர்களை "நீ இந்த ஊருக்கு அரசனாயிரு! நீ இந்த ஊருக்கு அரசனாயிரு" என்று அரசாங்க காரியத்தில் நியமிப்பானோ அவ்வாறே இந்தமுக்யப்ராணரும் அவருக்கு அடியார்களான இதர ஐந்து ப்ராணன்களைத் தனித் தனியானஸ்தானங்களில் நிறுத்துகிறார். அவரும் சுயமாய் அவருடைய இந்த ஐந்துரூபங்களால் அவரவர்கள் செய்யும் காரியங்களை ப்ரவர்த்திப்பவராய் ஆகிறார்.

இதில் ஓர் பிரமேயமுண்டு. ப்ராணன், அபானன், உதானன், வ்யானன், ஸமானன், ஆகிய இந்த ப்ராணர்கள் இருவகையாய் சொல்லப்படுகின்றனர். இவ்வைவர்கள் முக்ய ப்ராணரின் ஸ்வரூபங்கள்தாமென்று ஒருவகை. மற்றொருவகையாவது இவர்கள் முக்யப்ராணரின் புத்திரர்களென்று. இந்த முக்யப்ராணரின் புத்திரர்களுக்கு இதே ப்ராணன் அபானன் முதலிய ஐந்து பெயர்களுண்டு.

(4) முக்யப்ராணர் அபானனென்னும் ரூபத்துடனிருந்து அபானனென்னும் அவருடைய மகனை மானிடசரீரத்திலுள்ள மலவாய் (பாயு), ஜலவாய் (உபஸ்தம்) இந்த ஸ்தானங்களிலிருக்கச்செய்து அவனைக்கொண்டு மலமூத்ரங்கள் வெளிப்போகும்படி செய்கிறார். மலமூத்ரங்களை வெளியாக்குவதால்தான் அவருக்கு அபானனென்று நாமம். வாய், மூக்கு, கண், காது, இந்த ஸ்தானங்களில் முக்யப்ராணர் ஸ்வயமிருந்துகொண்டு ப்ராணனென்னும் பெயருள்ள அவருடைய மகனை பிரேரிபித்து சுவாசோச்வாசங்களை (மேல் மூச்சு கீழ் மூச்சுகள் விடும்படி) பிரேரிபிக்கிறார். ஜீவனத்திற்கு முக்ய காரணமான சுவாசாதிகளை நியமனம் செய்வதால் இவருக்கு ப்ராணனென்று பெயர். சரீரத்தின் நடுவிலுள்ள தொப்புளில் முக்யப்ராணர் ஸமானனென்ற பெயருடனிருந்துகொண்டு ஸமானனென்ற பெயருடனுள்ள அவருடைய மகனை ஏற்படுத்தியிருக்கிறார். பரமாத்மாவின் உத்தேசமாய் ஹோமம் செய்யப்படும் அன்னத்தை (அதாவது



மனுஷ்யர்கள் போஜனம்செய்யும் அன்னத்தை) அந்தந்த அவயவங்களில் எவ்வளவு சேர்ப்பிக்கவேண்டுமோ அவ்வளவை ஸமமாக இவர் சேர்ப்பிக்கிறார். இதனால் இவருக்கு ஸமானனென்று பெயர். இவ்வாறு அன்னரஸத்தை ஆங்காங்கு ஸமப்படுத்துவதால் ஏழுஜ்வாலைகள் உண்டாகின்றன, அதாவது ப்ரகாசிக்கும் அக்னிஜ்வாலைகள்போன்ற கண், காது, மூக்கு, த்வக்கு, நாவு, மனஸ்ஸு, புத்தி ஆகிய ஏழு ஞானேந்திரியங்களின் காரியங்கள் உண்டாகின்றன. இந்த இந்திரியங்களுக்கு அவைகளின் காரியங்களைச்செய்யும் சாமர்த்தியம் ஏற்படுகிறது. ஜீவன்தான் விஷயங்களுடன் சம்பந்தம்பெற்று விஷயங்களை அனுபவிப்பதாய் ஏன் சொல்லலாகாதென்றும் ஜீவனுக்கு விஷயானுபவம் ஏற்படுவதற்கு இந்திரியங்களிருப்பதாய் ஏன் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் கேட்கலாம். அது சரியல்ல, சரீரத்தின் மத்யபாகத்தில் ஹிருதயத்தில் ஜீவன் தன் சொரூபத்துடன் இருக்கிறான். அவன் அணுவாக அங்கு இருப்பதால் அவனுக்கு விஷயங்களின் ஸம்பந்தமேற்பட நடுவில் இந்திரியங்கள் இருந்தே தீரவேண்டும். அந்த இந்திரியங்களுக்கு ஸமானனெனப் பெயர்கொண்ட வாயு பகவான் எல்லாநாடிகளுக்கும் ஆதாரமாயுள்ள நாபிப்ரதேசத்திலிருந்துகொண்டு அன்னரஸத்தை ஏற்றத்தாழ்வில்லாவல் ஸமமாய் நாடிகளின்மூலமாய் இந்திரியங்களுக்கு ஊட்டுகிறார். ஆகையால் இந்திரியங்களுக்கு அவைகளுக்குகந்தவிஷயங்களை க்ரஹிக்கும் ஸாமர்த்தியம் உண்டாகிறது. (5) இந்த சரீரத்தில் நூற்றொன்று முக்கிய நாடிகளிருக்கின்றன. அவைகளில் ஒவ்வொரு நாடியிலும் நூறு நூறு உபநாடிகளிருக்கின்றன. ஒவ்வொரு உபநாடியிலும் அநேக சூக்ஷ்மநாடிகள் உண்டாகின்றன. ஆக மொத்தம் ஒவ்வொரு சரீரத்திலேயும் எழுபத்திரண்டாயிரம் நாடிகளிருக்கின்றன. இத்தனை நாடிகளிலும் வியானனென்னும் முக்யப்ராணர் வியானனென்னும் தம்முடைய மகனை பிரேரித்து அந்தந்த நாடிகளில் ரத்தமாகமாறிய அன்னத்தை சேர்ப்பித்துக்கொண்டு சஞ்சரிக்கிறார். இவ்வாறு பலவகையாய் அன்னரஸத்தை நயனம் செய்வதால் அவருக்கு வியானனென்று நாமம். எல்லாநாடிகளிலும் சிரேஷ்டமாயுள்ள ஸுஷும்னை என்னும் நாடியில் உதானனென்னும் பெயருள்ள முக்யப்ராணர் அதே

பெயருள்ள அவருடைய புத்ரரிடமிருந்துகொண்டு உபர சஞ்சரிக்கிறார். அப்படி அவர் உயர சஞ்சரிப்பதால் ஜீவனை அவன் செய்த புண்யத்தை காரணமாகக்கொண்டு ஸ்வர்க்காதி லோகங்களுக்கு சேர்ப்பிவிக்கிறார். ஜீவன் செய்த பாபத்தைக்காரணமாகக்கொண்டு அவனை நரகத்திற்கு சேர்ப்பிவிக்கிறார். ஜீவன் செய்த புண்ணிய பாபங்களை நிமித்தமாகக்கொண்டு அவனை மனுஷ்யலோகத்திற்கு சேர்ப்பிவிக்கிறார். (6) முக்யப்ராணர்தான் ப்ராணரெனப்படுகிறவர். அவர் வெளியே இருப்பவர். ஆதித்யனிடமிருந்து அந்தப்பெயருடன் உயரப்போகிறார். சூரியனிடமுள்ள இந்த முக்யப்ராணர்தான், அத்யாத்மனுயுள்ள அதாவது இந்த சரீரத்தின் சக்ஷுஸ்ஸுக்கு அபிமானி தேவதையான ப்ராணவாயுவை தாரணம் செய்கிறார்: பிருதிவீயில் அதற்கு அபிமானி தேவதையான அபானனெனப்பெயர்கொண்ட முக்யப்ராணர் இருக்கிறார். அவர் புருஷ சரீரத்தின் (குதத்தை) மலவாயை ஆசிரயித்துக்கொண்டிருந்துவரும் அபானனெனப்படும் தாஸவாயுவை தாரணம் செய்துகொண்டு சரீரத்தின் உள்ளே இருக்கிறார் த்யோலோகத்திற்கும் (சூரியனுக்கும்) பூலோகத்திற்கும் நடுவிலுள்ள பூதாகாசத்தை முக்யப்ராணர் ஸமானனென்ற ரூபத்தால் தரிப்பவராயிருக்கிறார். அவர்தான் இந்த சரீரத்தில் நாபியை ஆசிரயித்திருக்கும் ஸமானனென்னும் தாஸவாயுவை தாரணம் செய்துகொண்டிருக்கிறார். வெளியே வீசும் பௌதிகமான ஜடவாயுவை முக்யப்ராணர் வ்யானரூபத்தால் தாரணம் செய்கிறார். அவர்தான் அத்யாத்மாத்திலும் இந்த சரீரத்திலுள்ள எல்லா நாடிகளிலும் வியாப்தராயிருக்கும் அவருடைய புத்ரரான வ்யானவாயுவை தாரணம் செய்துகொண்டிருக்கிறார். வெளியேயுள்ள தேஜஸ்ஸை முக்யப்ராணர் உதானனென்னும் பெயருடன் தாரணம் செய்கிறார். அவரே அத்யாத்மத்திலும் தேகத்திலுள்ள சூட்டுக்கு அபிமானியான உதானனென்னும் தாஸவாயுவை தாரணம் செய்கிறார். உதானனென்னும் பெயருள்ள முக்யப்ராணர் உயிருக்குக்காரணமாயிருப்பதால் சரீரத்தில் சூடுகுறைந்த மனுஷ்யனைப்பார்த்து இவனுடைய எல்லா இந்திரியங்களும் மனஸில்லயமடைந்துவிட்டது. இவன் மற்றொரு சரீரத்தையே அடையப்போகிறான். (தொடரும்)



# துவாதச ஸ்தோத்திரம்.

(ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத்பாதாள் இயற்றியது.)

(மூன்றாவது அத்தியாயம்.)

(முன் தொடர்ச்சி.)

சென்னை-600

(1) உன்னுடைய வர்ணத்திற்கும் ஆசிரமத்திற்கும் உசிதமான நித்யம், நைமித்தியம், ப்ராரப்த்தம், ஆசியகர்மாவை அவசியம் செய். அனுபவித்துவா. ஸ்ரீ ஹரியின் பாதங்களில் விசேஷமாய் வணங்கிய புத்தியுடன்செய். ஏனெனில். ஸ்ரீ ஹரி ஒருவர்தான் உத்தமர், ஸ்ரீ ஹரி ஒருவரே குரு, உலகத்தாருக்கு தந்தை தாய் கதி ஸ்ரீ ஹரி ஒருவர்தான். (2) உத்தமர்களான மகாலட்சுமி பிரம்மா முதலானவர்களைவிட உத்தமரான அந்த புருஷோத்தமரைவிட வேறுயாரும் உலகில் கொண்டாடத்தகுந்தவரில்லை, உலகிலுள்ளதை எல்லாம் வெகுவாய் நினைப்பதெல்லாம் இனிபோதும் உன் மனதை ஸர்வேசுரவனை ஸ்ரீ ஹரியின் பாதத்தில் ஈடுபடச்செய். (3) ஸ்ரீ ஹரியின் சரணங்களை எண்ண ஒருவன் எத்தனித்தாலும் சரி அவனுடைய எல்லா பாபமும் அந்த க்ஷணமே நாசமடைகிறது. அப்படியிருக்க தியானமே செய்வானாகில் மிக்க மேன்மை பொருந்திய மோக்ஷபதவியே கட்டாயம் அவனுக்கு வந்துசேரும். ஆகவே அந்த ஸ்ரீ ஹரியின் ஸ்மரணையை ஏனோ விட்டுவிடுகிறீர்கள். (4) இருகைகளையும் தூக்கிக்கொண்டு சபதத்துடன் ஸ்ரீ வேதவியாஸர் சொன்ன மேலானதான தோஷமற்ற ஸத்யவாக்யத்தைக் கேளுங்கள். ஸ்ரீ ஹரிக்கு சிரேஷ்டரென்பவர் யாருமில்லை. ஸ்ரீ ஹரிக்கு ஸமமானவரும் யாருமில்லை. அவர்தான் எல்லா ஜீவ சமூகங்களைவிட சிரேஷ்டர். (5) அந்த ஸ்ரீ ஹரி எல்லோரைவிட உத்தமரல்லாவிடில் இந்த உலகமெல்லாம் அவருடைய வசத்தில் எப்படி இருக்ககூடும்? இது எல்லாம் அவருடைய வசத்திலில்லாமற் போனால் நித்தியசுகமென்பது இந்த ஜகத்திலேயே எப்படி இல்லாமற் போகும் நித்தியசுகம் இங்கு இல்லாமலிருப்பதால்தான் ஜகத்

ஸ்வதந்திரமில்லை என்றும் அவருடைய ஆதீனத்திலிருக்கிறதென்றும் ஏற்படுகிறது. (6) கர்மம், அவித்தை, துஷ்கர்மம், ஸத்வம், முதலிய குணங்கள் இவை முதலானவைகள் ஸ்வதந்திர காரணங்களாகமாட்டா. ஏனென்றால் அவைகள் ஜடசரீரங்கொண்டவைகள் என்பது எல்லோருமறிந்ததே. சேதனா சேதனாத்மகமான எல்லா பிரபஞ்சத்தை இந்த ஸ்ரீஹரிதான் பிரேரிபிக்கிறாரென்று வேத வாக்கியமே இருந்து வருகிறது. (7) பரமாத்மாவைத்தவிற இதரவஸ்து இல்லை என்றும் ப்ரத்யக்ஷ சித்தமான இந்த ஜகத் வ்யாவஹாரிகமென்றும் அத்வைதிகள் சொல்லுகிறார்களேயென்றால் வியாவஹாரிக பேதமென்பது ஜகத்குருவான வேதார்த்த நிர்ணயகமான பிரம்ம சூத்திரமியற்றிய ஸ்ரீவேதவியாஸருக்கு ஸம்மதமானதன்று. ஸ்ரீநாயணரின் அவதாரரான அவரே மகாபாரதம் மோக்ஷபர்வத்தில் இதை ஆக்ஷேபித்து பரமாத்மாவைக்குறித்து அநேக ஜீவர்களிருக்கின்றனர் அவர்களில் ஸ்ரீஹரிதான் ஸர்வோத்தமனென்று சொல்லியிருக்கிறார்கள். (8) சதுர்முகன் முதலான முக்திஜீவர்கள் ஸ்ரீஹரியை, அடைந்து முன் ஸம்ஸாராவஸ்தையில் எப்படியோ அப்படியேத்தான் எப்போதும் ஒரேமாதிரியான ஏற்றத்தாழ்வுடன் தன்சொரூபானந்தா விர்பாவரூபமான ஸ்தானத்தை அடைந்தனரென்று மேலானதாயுள்ள ஆகம பிரமாணமிருக்கிறது. (9) பூர்ணபிரக்ஞரென்று அழைக்கப்படுகிறவரான ஆனந்த தீர்த்தரென்னும் நற்பெயற் கொண்டவரால் இந்த ஸ்ரீஹரியின் அஷ்டகம் இயற்றப்பட்டது. பக்தியுடன் இதை படனம் செய்கிறவருக்கு பகவான் ஸ்ரீஹரி ப்ரஸன்னமாவார்.

மூன்றாவது அத்தியாயம் முடிந்தது.

---

## நான்காவது அத்தியாயம்.

(1) ஸ்வாபாவிகமான சம்பூர்ண ஆனந்தமும், அநந்த ஞானமும், சரீரமாகக்கொண்டவரும், விலக்ஷண சக்தியுள்ளவரும் அனந்த குணங்களுள்ளவரும் ஸர்வோத்தமரும் ஜராமரணமில்லாதவரும் ஸர்வகஷ்டங்களையும் பரிஹரிப்பவரும் துதிக்கத்தகுந்தவர்களில் மிகவும் மேலானவருமான லக்ஷ்மிகாந்தன் எங்களை



ரக்ஷிக்கட்டும். (2) ஸ்ரீஹரி நித்திரையற்றவராயிருப்பினும் ஆனந்தமுள்ளவராயிருப்பதால் வேதங்கள் இவரை ஸுகரூபி என்று அழைக்கின்றன. இவருடைய ஸ்வேச்சையால் உண்டானதாய் ஜகத்து இருப்பதால் இவரை உத்தமமான ஞானசொரூபி என்றும் இந்திரியங்களை பிரேரிப்பவரென்றும் வேதங்கள் அழைக்கின்றன. நித்திரையைப்பெறும் ஜீவர்கள் ஸுகானுபவம் பெறுவதாய் நாம்காண்கிறோம், பகவான் நித்திரையற்றவராயிருந்தும் ஆனந்தம் பெறுகிறாரென்றால் அவர் ஆனந்தசொரூபரென்பது ஏற்படுகிறது. ஜகத்தை எல்லாம் பகவான் தனது ஸ்வதந்திர இச்சையாலேயே சிருஷ்டிக்கிறாரென்றால் இவருடைய ஞானம், பரமோத்தமமானதென்றும் அது ஸ்வதந்திரமாகஇருப்பதால் இந்திரியங்களுக்கு அது அதீனமாயில்லாமல் அவைகளை பிரேரிபிக்க கூடியதென்றும் ஆகவே வேதங்கள் இவரை ஆனந்த சொரூபி, ஞானசொரூபி, இந்திரியப்ரேரகர்என்று அறிவிக்கிறதென்றும் தாத்பரியம். (3) பலவகை விசித்திரமான பிரபஞ்சத்தை நாநாப்ரகாரமாய் சிருஷ்டிப்பதால் ஸ்ரீஹரி சர்வோத்தமமான சக்திபடைத்தவராவர், எண்ணில்லாகுணங்களுள்ளவராவார், ஸர்வோத்தமராவார், இந்த பகவானுடைய ஆனந்த ஸ்வரூபத்தை எப்போதும் த்யானம் செய்பவருக்கு சுகரூபமாகிய அவருடைய ஸ்தானம் கிடைக்கும். (4) உத்தமனாகிய ஜகந்நியாமகராயும் எங்கும் வியாபித்திருப்பவராயுமுள்ள இந்த ஸ்ரீஹரியை ஸ்மரித்தால் அந்தக்கரணம் எப்படிதோஷங்கொண்டிருக்கும் இந்திரியங்கள்தான் எப்படிதோஷங்கொண்டிக்கும்? ஜன்மாதி விகாரங்களற்ற ஸ்ரீஹரியின் ஸ்வரூபம் தோஷமற்றது, உத்தமமானது, தன்னிடத்தில் தானே ஆனந்தத்தை அடைந்திருப்பது. அப்போதே உதித்த சூரியனைப்போன்ற காந்தியுடன் கூடியது, (5) நிர்மலமானவைகளும் வேதமாகிய சாணையில்வைத்து தீட்டியவைகளாயுமுள்ள சரியான மனமாகிய கத்திகளால் பலிஷ்டமானதாயும் தனது சொரூபாவிர்பாவத்திற்கு தடையாயுமுள்ள காமாதி சத்துருக்களை சீக்கிரமே நன்கு சேதித்து தன்னைமூடியிருக்கும் அவித்தையை நிவர்த்திப்பவரும் ஆதிஅந்தமில்லாதவரும் ஸர்வேசுவரனுமாகிய ஸ்ரீஹரியை பஜிப்பாய். (6) அந்த ஸ்ரீஹரி எல்லோராலும் துதிக்கப்பெறுகிறவர்களில் உத்தமரானவர்

அவர் ஸர்வகர்த்தாக்களான பிரம்மா, ருத்திரன், இந்திரன், சூரியன் முதலான தேவர்களையும், தனித்தனியே ஒவ்வொரு ரூபத்திலும் சிருஷ்டிக்கிறார், ரக்ஷிக்கிறார், சம்ஹரிக்கிறார், பக்தியுடன் சரணமடைந்தவர்களை தம்முடைய ஸ்தானத்தை அடையச் செய்கிறார். (7) உத்தமனாக இருப்பவனும் பூர்ணமானவைகளும் உத்கிருஷ்டமானவைகளும் எங்கும் அனந்தமானவைகளும் துதிக்கப்பெற்றவைகளாயுமுள்ள ஆனந்தாதிகுணங்களும் ஞானமும் தான் சரீரமாகவுமுள்ள இந்த ஸ்ரீரமாநாயகனான ஹரிக்கு, ஸமனாகவும் கூட எப்போதுமிருந்திருக்கவில்லை இனி இருக்கப்போவதுமில்லை, எப்போதும் எந்த இடத்திலுமில்லை. (8) இவ்வாறு தேவோத்தமரான ஸ்ரீஹரியின் ஸ்தோத்திரத்தை ஆனந்த தீர்த்தரென்னும் முனிவர் இயற்றியுள்ளார், இதை ஆதரவுடன் படிக்கிறவருக்கு நிர்துக்கமான ஆனந்தமுள்ள மோக்ஷமானது நிச்சயமாய் கிடைக்கிறது.

நான்காவது அத்தியாயம் முடிந்தது.

---

## ஐந்தாவது அத்தியாயம்.

(1) ஹேவாசுதேவா! எண்ணமுடியாதவனே! வைகுண்டவாஸியே! ஹேநிர்தோஷா! சாதுக்களால் சொல்லப்படுகிறவனே! மகாசௌந்தரியமுள்ள மகாலக்ஷ்மிக்கும் மனோஹரனே! மாலையைதரித்தவனே! அரக்கர்களைக்கொன்றவனே! உலகத்திற்கு ஆதாரனே! மகாதைரியம்படைத்தவர்களுக்கு ஞானத்தை அளிப்பவனே! எல்லோரையும் படைக்கும் பிரம்மனையும் படைத்தவனே! (2) ஸர்வோத்தமனே! இந்த சம்சாரபந்தத்தை பஸ்மீகரம்செய். ஞானத்தைத்தந்து எங்களைகட்டுபடுத்தும் அவித்தையாகிய கிரமையை நன்குசேதித்துவிடு, ஹேகேசவா! கேசவா! எல்லோரையும் அடக்கி ஆளுபவனே! உன்னைவணங்குகிறேன், நீ பாசதரனாகிய வருணனால் ஒருசமயம் ஆராதிக்கப்பட்டாய், மகாசூரர்களாகிய பிரம்மாதிகளுக்கும் நீ ஈசன்.

(தொடரும்.)



# அத்வைதிகளின் ஆத்திரம்.

நமதுநகரில் ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகள் நடத்திய துவைதாத்வைத விவாதம் ஒருவாறுமுடிந்து 2-மாதத்திற்கு மேலாகிவிட்டது, வாதமாட முன் வந்த அத்வைத பண்டிதர்கள் தங்கள் மதமாகிய அத்வைதம் கேவலம் அனுபவித்திற்குமட்டில் கொண்டுவரத்தகுந்ததேயன்றி அம்மதத்தை, எதிரி பெரியபண்டிதராயிருப்பின் அவருடைய முன்னிலையில் பரஸ்பரம் விரோதமின்றி எடுத்துச் சொல்லவோ அல்லது அதன் கக்ஷிகளைக்கொண்டு அதற்கு எதிரிடையான துவைதமத்தை நிக்ரஹம் செய்யவோ முடியாதென்பதை நன்கு கண்டுகொண்டதுமன்றி அவ்வாறு ஸ்பஷ்டமாய் பலர் அறிவித்தனர். ஆயினும் எப்படியோ அவர்கள் துவக்கிய வாதத்திலிருந்து வெளியேறிவிட பலசந்தர்ப்பங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து சரியானபடி ஒன்றும் அகப்படாமல், அவர்கள் ஓர்தோஷத்தைஎதிரியிடம் கல்பித்துவிட்டு நின்றுவிடலாமென யோசித்து ஏதோ உண்மைக்கு மாறாக ஓர் தோஷத்தை சொல்லிபார்க்க அதையும் ருஜூப்பிக்கவும் முடியாமல் சபையிலிருந்துமௌனமாய் எல்லோரும் எழுந்துபோய்விட்டனர் இவ்வளவு ஆகியும்கூட இவர்கள் இன்னும் அடங்கியபாடில்லை. திருவண்ணாமலையில் அத்வைதம் அவைதிகமென்று சொன்ன ஸ்ரீ ஸ்வாமிகளை பகிரங்கமாய் வாதத்திற்கழைத்தும் அவர்அவ்வாறே கும்பகோணத்தில் ஒருமாதகாலமிருந்து சபையை நடத்தியும், பிரபலமான அத்வைதபண்டிதர்கள் வந்தும், அத்வைதம் அவைதிகமல்லவென்று ஸாதிக்க முடியாமற் போய்விட்டதேயென்ற துக்கம் அவர்களை இன்னமும் வாட்டுகிறதென்று தோன்றுகிறது. பலமிகுந்த ஆத்திரத்துடன் சராமாரியாய் பிரதி வாரமும் ஆரிய தர்மத்தில், பலவகை நிருபங்களை எழுதிவருகின்றனர். இவ்வாறு எழுதுவதால் என்ன பயனென்றும் இதனால் த்வேஷம் அதிகரிக்குமென்று இனி எழுதவேண்டாமென்றும் ஓர் பொறுப்பாளியும் சொல்லிப்பார்த்தார். அவர் சொன்னதாவது "மாத்வஸ்வாமிகள் சொன்னதைக் கண்டு நமது பத்திரிக்கையில் பலர் பல்விதமாக

எழுதுகின்றனர். அவர் தமிழறியார். இதைப்படியார். அவரறியாது ஆயிரம் எழுதிபயனென்ன? இதார்மூலம் இதைக்கேட்டு ஒரு ஸமயம் த்வேஷமதிகமாகலாம், ஆதலால் இச்சமயம் இக்குறளை நினைவூட்டுகிறேன் நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லதன்றே மறப்பது நன்று" இதற்குபின்பும் அநேக நிரூபங்கள் வெளிவந்துகொண்டேயிருக்கின்றன. ஸ்ரீஸ்வாமிகள் சமீப ஊர்களைவிட்டு தூரம் செல்லச்செல்ல நிர்பயமாய் மனம் போனபடிக்கெல்லாம் பலர் எழுதுகின்றனர். சில நிரூபங்களில் பொய்யும் பித்தலாட்டமும்தான் அதிகம். விஷயவிசாரம் செய்வது மிகவும் மட்டு. வீணாடம்பரமான வார்த்தைகளும் சௌரியப்பேச்சுகளும் சமாதானமொழிகளும் நிறைந்து வேடிக்கையாகத்தானிருக்கிறது. ஸ்ரீஸ்வாமிகள் அத்வைதத்திற்கு வேதத்தில் பிரமாணமில்லை அதனால் அது அவைதிகம் என்று சொன்னதும் அத்வைத பண்டிதர்களால் அதை ருஜூப்பிக்க முடியாமற்போனதும், உலகில் எங்கும் பிரஸித்தமாய்போய் ஸாமானியர்களும் இம்மதத்தை இழிவாய் எண்ணநேரிட்டதே என்னும் துக்கத்தால் அத்வைதம் அவைதிகமன்று, வைதிகம் தானென்ன, அவர்கள் தம்மாலானவரை பிரஸித்தி ஏற்படுத்திக்கொள்ள ஏதோபலவாறு பல நிரூபங்களால் தங்கள் கோஷ்டியில் பிரசாரம் செய்துகொள்ளுகின்றனரென நாம் அந்த நிரூபங்களை கவனிப்பதே இல்லை ஆயினும் ஸ்ரீமான் M.N. சுப்பிரமணிய சாஸ்திரியார் என்றொருவர் பலரைப்போல்பலவாறு கும்பகோணம் சபையைப்பற்றியும் ஸ்ரீ ஸ்வாமிகளைப்பற்றியும் தூஷிப்பதோடு நிற்காமல் ஸ்ரீ மத்வமதத்தைப்பற்றியும் எமது மதாசாரியாளான ஸ்ரீ மத்வாசாரியாளைப்பற்றியும் பல தூஷணைகளை எடுத்துச்சொல்லியுள்ளார். இதற்கும் நாம் உதாசீனமாயிருந்து தக்க மறுமொழிகளைக்கூறாமலும் எமது மதத்தின் கௌரவத்தையும் எமது ஆசாரியாளின் மேன்மையையும் அறிவிக்காமலுமிருந்தால் நாம் எமது கடமையிலிருந்து தவறியவர்களாவோம். ஆதலால் இந்த சாஸ்திரியாரின் கூற்றுக்கு சமாதானம் சொல்லவேண்டிய இச்சந்தர்ப்பத்தை கைக்கொண்டு அத்வைதத்தின் அவைதிக தன்மை, அத்வைத உபாஸனையால் ஏற்படும் கெடுதிகள், த்வைத மதத்தின், மேன்மை அதைத்தழுவுவதால் ஏற்படும் மகாபலன்கள்



ஸ்ரீமத்வாசாரியாளின் தெய்வீகத்தன்மை அவர்வாயுபகவானின் அவதாரமென்பது அவருடைய கிரந்தங்களின் மகத்துவம் இவைகளை அநேக சுருதி ஸ்மிருதி வசனங்களுடன் நிரூபித்துக்காட்டி ஸ்ரீமத்வாசாரியாளின்மீதும் அவருடைய நூல்களின்மீதும் தப்பாய் த்வேஷபுத்தியால் ஸ்ரீ அப்பையதீக்ஷதர் போன்றவர்களால் சொல்லப்பட்டிருக்கும் பலவகை ஆக்ஷேபணைகள் அவைகளுக்கு எமது பூர்வாசாரியர்கள் அளித்த சமாதானங்கள் இவைமுதலான நம்மவர்கள் அறியவேண்டிய பலவிஷயங்களை நாம்இந்த நிரூபத்தில் எடுத்துக்காட்டுவோம். விஷயங்களை வெகுவாய் ஸங்கிரஹித்து சொல்வோமாயினும் சொல்லவேண்டிய அம்சங்கள் அதிகமாயிருக்கிறபடியால் இந்த வியாஸம் குறைந்தபக்ஷம் 3-4-ஸஞ்சிகைகளில் தொடர்ந்து வருமென்றே நம்புகிறோம். முதலில் இந்த சாஸ்திரியாரின் கூற்று எவ்வளவு தூரம் நிஜமென்பதையும் பொருப்புள்ளதென்பதையும் அறிவிக்க இந்நகரில் நடந்த த்வைதாத்வைத விவாதத்தைப்பற்றி அவர் சொல்லியுள்ள ஒன்றிரண்டு விஷயங்களை எடுத்துக்காட்டுகிறோம்.

அத்வைதம் அவைதிகமென்று ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் சொல்வதற்கு மூன்று காரணங்களென அவர் பிரஸித்தப்படுத்துகிறார் அவையாதெனில், (1) லோகமான்யதிலகரை ஸ்வாமிகள் சந்தித்தபோது அவர் த்வைதமதமும் ஓர் மதமாவென்று கேட்டாராம். (2 மைசூர் லக்ஷ்மீபுரம் ஸ்ரீனிவாஸாசாரியாரென்றொருவர் த்வைதத்திற்கு ஸாதகமான சுலோகத்தை யாதோ வைதபுராணத்தில் சேர்த்துவிட்டதாய்ச் சொன்னாராம். (3) மதுரையிலிருந்து ஓர் சாஸ்திரியார் அத்வைதம் வைதிகமென்று தம் முன்னிலையில் ஸ்தாபிக்கிறேனென்று சொன்னவர் குறித்த தேதிக்குள் வரவில்லையாம். இதனால் ஸ்ரீஸ்வாமிகள் கோபமடைந்து இவ்வாறு அத்வைதம் அவைதிகமெனச்சொல்லி வருகிறாரெனச்சொல்லப்படுகிறது. இந்நகர் பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் போன்ற அத்வைத பண்டிதர்களும் இவ்வாறு ஸாமானியர்களின் கூட்டத்தில் பிரஸங்கம் செய்கிறார்களாம் சரியான பாண்டித்யம் படைத்தவர்கள் ஓர் விஷயத்தை எடுத்துச்

சொல்லும்பொழுது அந்த விஷயத்தின் மீது இதராளால் சொல்லப்படும் ஆக்ஷேபணைகளை ஒளியாமற்சொல்லி அவைகளுக்கு ஸமாதானம் சொல்லவேண்டியது ஒழுங்கான முறை. அவ்வாறு செய்வதைவிட்டு சந்தர்ப்பத்திற் கொவ்வாததாய் ஸாமானியர்களை மயக்கும், ஏதோ சிலஸம்பவங்களை மட்டில்சொன்னால் அந்தவிஷயத்தின் மீதுள்ள சாஸ்திர சம்பந்தமான ஆக்ஷேபணைகளுக்கு ஸரியான பதிற்கூறமுடியாமல் இந்தஸம்பவங்களைச் சொல்லியாவது லௌகிகமாய் ஸ்ரீஸ்வாமிகளைக் குறைத்துச்சொல்லி அவருடைய கக்ஷியும் இப்படித்தான் துர்பலமானதென்று அறிவித்து திருப்தியடையலாமென அவர்கள் எண்ணுகின்றனர் எனவேண்டும். பிராந்தியால் அவர்கள் ஸ்ரீஸ்வாமிகளை இந்த ஸம்பவங்கள் குறைத்துக்காட்டியவைகளென்று எண்ணியிருக்கின்றனர். உண்மையாதெனில் பாலகங்காதரதிலகர் தனது கீதாரஹஸ்யமென்னும் நூலில் தவறுதலாக பலதூஷணைகளை த்வைதமதத்தின்பேரில் சொல்லியிருப்பதை பூனாவிலுள்ள பல மாத்வப்ரமுகர்கள் ஸ்ரீஸ்வாமிகளின் கவனத்திற்கு கொண்டுவர, ஸ்ரீஸ்வாமிகள் லோகமான்யரெனப்படும் பாலகங்காதரதிலகர் ஸ்ரீமத்வமதத்தையோ அல்லதுஅத்வைத மதத்தையோ சரியானபடி உணராமல் அவருடைய லௌகிகஞானத்தைக்கொண்டு ஏதோ எழுதி விட்டதாயும் ஸ்ரீபகவத்கீதை த்வைதத்தைத்தான் அறிவிக்கிறதென்றும் பாகல் கோட்டையிலிருந்து அறிவித்தார். ஸ்ரீமான் அண்ணாராவ் தேவளே முதலான பல பூனா வக்கீல்களும் தனவந்தர்களும் சேர்ந்து திலகருக்கும் ஸ்ரீஸ்வாமிகளுக்கும் நேரிலேயே விவாதமாகும்படி 1917-ம் வருஷத்தில் சிக்கோடியிலும் பூனாவிலும் ஏற்பாடுசெய்தனர். அவ்வாறே பெரியசபைகள் கூட்டப்பட்டு சரியான மத்யஸ்தர்களுடனும் இருதாரத்தாரின் கையெழுத்துகளுடனும் வாதம் நடைபெற்று முடிவில் திலகர் மிகவும் ஸம்பாவிதரானதால் தான் ஸ்ரீமத்வாசாரியாளின் கீதாபாஷியத்தை சரியாய் உணரவில்லையென்று தன் தவறுதலை ஒப்புக்கொண்டு தனது நூலை அடுத்தபடி பதிப்பிக்கும்போது அதை திருத்தி சரியானபடி மாற்றிக்கொள்வதாய் சம்மதித்தார். இது சம்பந்தமான விவாத விபரமடங்கிய ரிபோர்ட்டுகள் அக்காலத்திலேயே மகாராஷ்டிர பாஷையில் பிரசுரமாகி யிருக்கின்றன.



இந்த ஸம்பவம் ஸ்ரீஸ்வாமிகளுக்கு கௌரவத்தை அளிக்ககூடியதா அல்லது அவமதிப்பைத் தரக்கூடியதா என்பதை நேயர்களே! நீங்களே யோசிக்கலாம். (2) ஸ்ரீமான் மைசூர் லக்ஷ்மீபுரம் ஸ்ரீனிவாஸாசாரியாரைப் பற்றியுள்ள சம்பவத்தைச்சொல்வோம். ஸ்ரீஸ்வாமிகள் பெலகாமில் அவருடைய குருவின் மகாஸமாராதனை உற்சவத்தை வெகுவிசேஷமாய் நடத்தியசமயம் வழக்கப்படி பெரிய வித்வத்ஸபைநடந்தது அச்சமயம் மைசூர் பிரம்மஸ்ரீ ஸதாசிவசாஸ்திரிகள் லக்ஷ்மீபுரம் ஸ்ரீனிவாஸாசாரியரால் இயற்றப்பட்டுள்ள தர்சன மீமாம்ஸை என்னும் நூலை ஸ்ரீஸ்வாமிகளிடம் கொடுத்து அதில் பிரசுரிக்கப்பட்டிருக்கும்அத்வைதமதம் பிரச்சன்ன பௌத்தமென்று அறிவிக்கும் ஸ்ரீபாத்மபுராண வசனத்தின்மீது மைசூரில் பல ஆக்ஷேபணைகள் நடந்ததாயும் பிறகுலக்ஷ்மீபுரம் ஸ்ரீனிவாஸாசாரியார் அதை பிரசுரித்ததைக்குறித்து மன்னிப்புகேட்டுக்கொள்ளும்படி நேர்ந்ததாயும் அறிவித்தார். ஸ்ரீஸ்வாமிகள் அந்த புராணவாக்கியம் சரியானதென்றும் இதரர்களால் சேர்க்கப்பட்டதென்று சொல்வது தவறென்றும் அத்வைதமதம் பிரச்சன்ன பௌத்தமதமென்று ஸ்ரீ சங்கராசாரியாளின் வெகுகாலத்துக்குமுன்பே கௌடபாதாசாரியாள் காலம்முதற்கொண்டே பண்டிதர்களில் வழங்கிவருவதாயும் ஸ்ரீமத்வாசாரியாரும் அவருடைய மதத்தினர்கள் மட்டிலுமல்ல யாதவப்ரகாசர் யாமுனாசாரியார், ஸ்ரீராமானுஜர், விக்ஞானபிக்ஷு, வேதாந்த தேசிகர், வல்லபாசாரியாள், பாஸ்கராசாரியாள் முதலான பண்டிதர்களும், அவ்வாறே சொல்கின்றனரென்றும் அறிவித்து லக்ஷ்மீபுரம் ஸ்ரீனிவாஸாசாரியாள் ஓர் லௌகிக உத்தியோகத்தில் அமர்ந்திருப்பதால் ஏதோ லௌகிக சங்கடங்கள்ஏற்பட்டு அதிலிருந்து தப்பிக்க இவ்வாறு தாமே தன் நிரூபத்திற்கு மறுப்புஎழுதி மன்னிப்பு கேட்டிருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டதாய்த் தெரியவருகிறது. இதன் விபரமும் அச்சந்தர்ப்பத்தில் பெலகாமில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்த பாத்ம புராணவசனத்தையும் அதன்மீது ஏற்பட்ட ஆக்ஷேபணை ஸமாதானங்களையும், இந்த வியாஸத்தில், ஸ்ரீமத்வாசாரியார் வாயு பகவானின் அவதாரம், அத்வைதமதம் அவைதிகம் இவைகளை

அறிவிக்கும் அநேகசுருதி ஸ்மிருதி புராண வாக்யங்களை காட்டும் ஸந்தர்ப்பத்தில், விஸ்தாரமாய் நிரூபிக்கிறோம். இந்த விசிஷ்டாத்வைத பண்டிதராகிய லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசாரியார் எல்லாமதங்களைப்பற்றி விஷயவிசாரம் செய்துவரும்போது அத்வைதமதம் பிரச்சன்ன பௌத்தமதம் தானென்று சொல்லி மிகவும்பிரவலித்தமான பாத்ம புராணத்திலிருந்து வசனங்களைக்காட்டி அந்த புஸ்தகத்தை பகிரங்கப்படுத்தியதும் அம்மாகாணத்திலுள்ள அத்வைதிகள் மிகவும் ஆத்திரப்பட்டு மகாநாடுகளைகூட்டி பலவகை தீர்மானங்களைசெய்து மைசூர் மகாராஜாவுக்கு அறிவித்து அவருடைய ராஜாங்க உத்தியோகத்திற்கே ஹானிவரும்படிக்கு ஏற்பாடு செய்ததாயும் வேறுஉபாயமின்றி அவர்மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி நேர்ந்ததாயும் பல நம்பத்தகுந்தசெய்திகள் எட்டியிருக்கின்றன. அவ்வாறு நடந்திருக்கலாமென இந்நகரில் நடந்த த்வைதாத்வைத விசாரத்தில் கலந்துகொண்ட சில உத்தியோகஸ்தர்களுக்கு இப்பால் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து நிச்சயிக்க இடமிருக்கிறது இது நமக்கு ஓர் ஆச்சரியமுமன்று. எமது பூர்வாசாரியர்கள் அத்வைதிகளால் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்திருக்கின்றனரென்று ப்ராசீனநூல்கள் அறிவிக்கின்றன. அத்வைதிகள் எங்கும் பிராபல்யத்தை அடைந்திருந்து அவர்களின் சங்கியையும் வலுத்திருக்க ஸ்வல்பகூட்டத்தார்களும் தம்மதத்தைசரியாய் உணர்ந்திராத பலரையும் சுயஜாதி மதம் அபிமானமில்லாத பலரையும் கொண்டவர்களுமான இந்த மாத்வர்கள் அவர்களின் மதத்தைத்தாக்கி அவர்களின் மர்மங்களை வெளிப்படுத்தினால் அவர்கள் தங்களாலானவரை ஹிம்ஸிக்க எத்தனிப்பார்கள்தான். ஆனால் அத்வைதிகள் எல்லோருமே அவ்வாறு த்வேஷபுத்தியைக் கொள்வார்களென்று நாம் சொல்லத்துணியோம். அவர்களில் அநேக ஸாத்விகசிகாமணிகளிருக்கின்றனர். நம்மவர்கள் அவர்களுடன் சிநேகபாவத்தையும் விவாகாதி ஸம்பந்தங்களையும் செய்துகொண்டு மதவிசாரத்தில் மட்டில் அபிப்பிராய பேதங்கொண்டு அதனால் சிநேகபாவாதிகளுக்கு குறைவுஏற்படாமல் நடந்துகொள்வதுபோல் அவர்களிலும் அநேகர் அவ்வாறே நடந்துகொண்டு இம்மாத்வர்களுக்கு பல அரிய



உபகாரங்களையும் செய்து வருகின்றனர். எங்கும் துஷ்டர்கள் இருப்பதுபோல் அம்மதத்தினர்களிலும் துஷ்டர்களிருந்து வருகின்றனரென்றும் அவர்களால் அநேகசங்கடங்கள் உண்டாகின்றனவென்றும்தான் நாம் இங்கு பிரஸ்தாபிக்கின்றோம். மூன்றுவது காரணத்தைப்பற்றி நாம் பிரஸ்தாபிக்கவேண்டியஅவசியமே இல்லை. அது ஓர் காரணமாயிருக்குமென்று எந்த முழுமூடனும் நம்பமாட்டான். அத்வைதம் அவைதிகமென்று சொன்னவுடன் கோபம் அதிகரித்து ஆத்திரம்பொங்கி புத்திதடுமாறி வேறு வழியன்றி இவ்வாறெல்லாம் உண்மைகளை மறைத்தும் திரித்தும் வாயிற்வந்தபடி எல்லாம்பேசியும் மூலை மூலைக்கோடியும் சந்திசந்தியாய்நின்றும் வீண் ஆர்பாட்டம் செய்வானேன்? அத்வைதத்திற்கு இப்போது ஸ்ரீஸ்வாமிகளால் என்னபுதியதாய் ஆபத்து நேர்ந்துவிட்டதோ தெரியவில்லை. அநேக நூற்றாண்டுகளாய் அதன்மீது அநேக தூஷணைகளிருந்தேவருகின்றன. ஸாங்கியாதி மதாசாரியார்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை ஸ்ரீராமானுஜர் அதைதிக்கரித்திருக்கிறார். ஸ்ரீ வேதாந்த தேசிகர் போன்ற அந்த மதத்தினர்களநேகர் திரஸ்கரித்திருக்கின்றனர். ஸ்ரீ மத்வாசாரியரோ சதச: அதை கண்டனம் செய்திருக்கிறார். ஸ்ரீஜயதீர்த்தர், ஸ்ரீவியாஸராஜர், ஸ்ரீவிஜயீந்திரர், ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீதரங்கிணிராமாசாரியார், ஸ்ரீவனமாலாமிச்ரர், அத்வைதகாலாநலகாரரர் பைடனஸி நாராயணாசாரியாள் முதலான நூற்றுக்கணக்கான மாத்வமதஸ்தியர்கள் தங்கள் எண்ணிறைந்த நூல்களில் அத்வைதத்தின்மீது தூஷணைகளை சரமாரியாய் பொழிந்திருக்கின்றனர். அந்த வித்வத்கோஷ்டியில் சேர்ந்தவரான இந்த ஸ்வாமிகளும் அத்வைதத்தின்மீது பல தூஷணைகளை எடுத்துச்சொன்னாரென்றால் இவர்களிடம் மட்டில் ஏன் இவ்வளவு ஆத்திரப்படவேண்டும். ஸாமர்த்தியமிருந்தால் இவர்களுடன் ஒழுங்காக வாதமாடி அத்வைதத்தை ஸ்தாபிக்கட்டும். இல்லாவிடில் ஓர் சாஸ்திரியார் சொன்னபடி "இந்த ஸ்வாமிகள் அத்வைதம் அவைதிகமென்று சொல்லிவிட்டதால் அது அவைதிகமாய்ப் போய்விடுமா? வசிஷ்டரின் வாக்கால் பிரம்மரிஷி என்றவந்தது போல் இவர்வாக்கால்தான் அத்வைதம் வைதிகமென்று

வரவேண்டுமா? தொன்று தொட்டுவரும் எமது மதத்தையே நாம் கைக்கொள்வோம்" என்று மனதில் ஏகாந்தமாய் ஸமாதானம் பண்ணிக்கொண்டு எல்லாம் பொய் நானே பிரம்மமென்று ஆனந்தமாய் உட்கார்ந்திருக்கட்டுமே. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்னும்பழமொழியை ஞாபகத்திற்கு கொண்டுவந்து ஆத்திரத்திற்கு இடம்கொடாமல் சாவதானமாய் அத்வைதம் அவைதிகமென்று ஸ்ரீஸ்வாமிகள் எதற்காக சொல்லுகிறார் அதன் காரணமென்னவென்பதை கவனிக்கலாமே.

## அத்வைதம் அவைதிகம்.

அத்வைதம் அவைதிகமென்றால் அத்வைதம் வேதத்தில் சொல்லப்படவில்லை என்றாகும். இதனால் அத்வைதம் வேதத்தின் ஸம்மதியில்லாத அப்ராமாணிக மதமென்றும் அது வேதத்தை பிரமாணமாகக் கொண்டவர்களால் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததல்லவென்றும் ஏற்படுகிறது. அத்வைதம்வேதத்தில்சொல்லப்படுவதில்லை யாதலால் அவைதிகமென்பதை ஸ்ரீஸ்வாமிகள் ஸுலபமாய் எல்லோர் மனதிற்பதியுமாறு நிரூபித்துக்காட்டுறார். வேதம், பிரம்மசூத்திரம், பகவத்கிதை ஆகிய ப்ரஸ்தானத்ரயங்கள் அத்வைதத்திற்கு பிரமாணமென்று அத்வைதிகள் சொல்லுகின்றனர். இம்மூன்றிலும் அத்வைதம் சொல்லப்படவில்லை என்பது ஸ்ரீஸ்வாமிகளின் வாதம்.

ஜீவன் ஈசுவரன் இவர்களின் பேதத்தையோ அபேதத்தையோ ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் (வேதம் கீதை முதலியவை) ஆகிய ப்ரமாணங்களால் ஸாதிக்கவேண்டுமென்று த்வைதிகள் அத்வைதிகள் இவ்விருகக்ஷியாரும் ஒப்புக்கொண்டதே. மகாவாகியங்களென அத்வைதிகளால் கொண்டாடப்படும் தத்வமஸி, அஹம் பிரம்மாஸ்மி முதலான 4-5, வாக்கியங்களைத்தவிர மற்ற ப்ரத்யக்ஷம் என்ன, அனுமானம் என்ன, கர்மகாண்டம், பிரம்மகாண்டம், உபநிஷத்துக்கள் இவைகளைக்கொண்ட எல்லா வேதங்களென்ன இவைகள் எல்லாமே பேதத்தை ஸாதிக்கிறதென அத்வைத மதஸ்தாபகளான ஸ்ரீசங்கராசாரியாளே ஒப்புக்கொண்டுவிட்டார்.

(தொடரும்.)



# ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிமடம்

## ஸமஸ்தானாதிபதியவர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஜ்யேஷ்டபகுளத்ரயோதசி நெருங்கிவிட்டது. இன்று முதல் சரியாக 13 நாட்கள்தானிருக்கின்றன. அன்று இம்மண்ணுலகினின்றும் அந்தர்தானமடைந்த மகானுபாவரான ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் ஆராதனை மஹோற்சவம் பிரதி வருடம்போல் இந்நகரில் தங்கள் மேலான ஆக்ஞைப்படி நடத்தப்படும். ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு அன்னமளிக்கப்படும். தங்கள் மடத்திலும் வெகுவாய்க் கொண்டாடப்படலாம். அலங்கார பந்தியுடன் மிருஷ்டான்னமளிக்கப்படலாம். குருப்ரஸாதத்தை உண்டு அவரவர்களின் ஜன்மம் ஸபலமாயிற்றென்று ஆனந்தப்படலாம். அந்த ஆனந்தம் எமது மித்திரன் வாயிலாயும் அறிவிக்கப்படலாம். ஆனால் இவைகளால் மட்டில் நாம் ஆனந்தமடையமாட்டோம் என்பதை மிகுந்த வணக்கத்துடன் அறிவிக்கின்றோம். மாத்வர்கள் இவ்வருடம் தங்களிடமிருந்து வேண்டுவது இவ்வுணவல்ல. அந்த மகானுபாவர் சேகரித்துவைத்திருக்கும் உணவைத்தான் வேண்டுவோம். அதனால்தான் நாம் திருப்தியடைவோம். வீணாய் எங்களை ஏமாற்றாதீர்கள். அவ்வுணவு தங்கள் சுவாதீனத்திலேயே இருக்கிறது. தாங்கள் மனம் வைத்தால் அதைத்தரலாம். அதைத்தாருங்கள், அதுதங்கள் மடத்தின் தனிமையான சொத்து தங்கள் மடத்திற்கு மிகுந்த கௌரவத்தை அளிக்கும் சொத்து. எல்லோராலும் வேண்டப்படும் சொத்து. இக்காலத்திற்கேற்ற சொத்து. இன்னமும் ஏன் உபேக்ஷை. தங்கள் மடத்திலுள்ள ப்ராசீன விக்ரஹாதிகளை, பிரதிமாதமும் நூற்றுக்கணக்காய் சம்பளம்கொடுத்து கத்தி துப்பாக்கிகளுடன் சிப்பாய்களைவைத்து காத்துக்கொண்டு வருகிறீர்களே! தங்களுக்கு பூர்வாசாரியாளாய், தங்கள் பீடத்திற்கே மிக்க கௌரவத்தை அளித்தவராய், 64 கலைகளைக்கற்றவராய், கருணாமூர்த்தியான ஸ்ரீ ராகவேந்திரருக்கு பரமகுருவாய், அத்வைத மதத்திற்கு காலாக்னி போன்றவரான ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள் நம்மவர்களிடம் அன்புவைத்து, கருணைகூர்ந்து, வெகு சிரமப்பட்டு இயற்றி தங்கள் மடாலயத்தில் ஸ்தாபித்திருந்த 104 கிரந்தங்கள் எங்கே? எங்கே என்று பன்முறை கேட்கிறோம்! இவைகள் பதிப்பிக்கப்பட்டு பிரசாரத்திலிருந்தால் நாமிவ்வாறு கேட்போமா? ஆ! தாங்கள் அசட்டையாயிருந்து எல்லாவற்றையுமா இழந்துவிட்டீர்கள்! எல்லாமா நஷ்டமாகிவிட்டது? இல்லை, இல்லை. எத்தனையோ கிரந்தங்கள் இன்னமும் ஆங்காங்கு இருந்து வருகின்றன. தங்கள் தலைமையின்கீழ் ஓர் கமிட்டியை ஏற்படுத்துங்கள். புஸ்தகங்களை சேகரிக்கச் செய்யுங்கள். அவைகளைப் பதிப்பிக்கச்செய்யுங்கள். தங்கள் பரமாசாரியாளின் அபிப்ராயம் நிறைவேறும்படி செய்யுங்கள். உலகில் எங்கும் த்வைதத்தின் மீது யுத்தம் தொடுக்கப்பட்டிருக்கிறது. அத்வைதிகள் புகானுபுங்கமாய்

பாணவர்ஷங்கள்போல் மர்மங்களை பேதிக்கும் யுக்திவாதங்களை வர்ஷிக்கின்றனர். எவ்வகையிலும் தற்போது பலஹீனர்களாய்ப்போன நம்மவர்கள் தம்மதத்தை ஸம்ரக்ஷித்துக்கொள்ள அஸ்திர சஸ்திரங்களை தேடி வருகின்றனர். நம் தென்னாட்டு மாத்வ போர்வீரர் வைதிக ஸேனாதிபதி ஸ்ரீ விஜயீந்திரர் தேடிக்கொடுத்த அஸ்திரசஸ்திரங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் புதைந்து மடிந்து மண்ணாய்ப்போகவேண்டுமோ? பிறர் செய்யும் ஹேளனத்திற்கு நாம் ஆளாகவேண்டுமோ? இதோபாருங்கள் ஓர் சாஸ்திரியார் எழுதுவதை! "முக்யமாய்ச்செய்யவேண்டிய ஓர்கடமை அவர்களின் (த்வைதிகளின்) தலைச்சுமையாய் இருக்கிறது. ஸ்ரீமான் அப்பையதீக்ஷிதர்வாள் மத்வமதவித்வம்ஸனம் என்றோர் கிரந்தம் எழுதியிருக்கிறார். அதற்கு நாளதுவரை த்வைதமதாசாரியார்கள் கண்டனம் எழுதவேயில்லை" (ஆரியதர்மம் பக்கம் 3:6) மத்வமதவித்வம்ஸனத்திற்கு கண்டனமாக மத்வதந்த்ரமுகபூஷணம் (ஸ்ரீ விஜயீந்திரர் இயற்றியது) அபிநவகதை, (ஸ்ரீ ஸத்யநாதர் இயற்றியது) அத்வைதகாலாநலம் (ஸ்ரீ வைஷ்ணவி நாராயணசாரியாள் இயற்றியது) என்று த்வைதிகளின் மூன்று நூல்களிருக்கின்றனவென்பதை அவர்கள் அறியவில்லை. அவர் எப்படித்தான் அறியக்கூடும். நம்மவர்கள்தான் அறிவார்களோ. இல்லை இவைகளைப்பதிப்பித்து பிரசுரிக்கும் பொருப்பை ஏராளமான வரவு செலவுகளை நடத்தும் மடாதிபதிகளே நழுவவிட்டார்களென்றால் சாமானியர்களால் எப்படி முடியும்? இப்பால் சிலவருடங்களாக மத்வமதவித்வம்ஸனம் அத்வைதிகளில் வெகுவாய் பிரசாரமடைகிறதென்று இப்பத்திரிகையின் ஆசிரியர் பல ஊர்களில் பல உபன்யாஸங்களில் அறிவித்துள்ளார். அதற்கு கண்டனமாகவுள்ள ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள் இயற்றிய நூலை உடனே பதிப்பிக்கவேண்டுமென்று தங்களிடமும் சென்றவருடத்திலேயே தாங்கள் இங்கு திக்விஜயம்செய்தஸமயம் பாபநாசம் முகாமில் விக்ஞாபனம் செய்துகொண்டார். இந்த ஏப்ரல் மீ வாக்கிலும் தங்கள் சிவகங்கை முகாமுக்கு கடிதம் மூலமாயும் எழுதிக்கொண்டார். இப்பவும் இம்மித்திரன் வாயிலாயும் நாம் விக்ஞாபித்துக்கொண்டிருக்கிறோம். மகன் தனது தந்தையை அன்புடன் அவருடைய மனம் திரும்பும்படி கேட்பதுபோல் நாம் இம்முறையை கைக்கொண்டு கேட்கின்றோம் உடனே சற்றும் தாமதியாது ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் நூல்களை அவைகளிலும் அவஸரமாய் மத்வதந்த்ரமுகபூஷணத்தை (கண்டகோத்தாரத்தை) உடனே பதிப்பிக்கும் வேலையைக்கைக்கொள்ளுங்கள். இம்மாத்வமித்ரனுடைய பிரார்த்தனை தங்கள் செவிக்கேறாமற் போகாதென்பது திண்ணம். "ஓர்மாதத்திற்குள்ளாகவே இப்புத்தகத்தை வெளிப்படுத்திவிடுகிறோம். ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் நூல்களை சேகரிக்கவும் பிரசுரிக்கவும் இவ்வாறு ஏற்பாடுசெய்திருக்கிறோ"மென்று கருணைகூர்ந்து அம்மகானின் புண்யதினத்தன்று தாங்கள் தங்கியிருக்கும் ஊரிலும் அவருடைய பிருந்தாவனமுள்ள இந்நகரிலும் நம்மவர்களின் கூட்டத்தில் உத்கோஷிப்பதுடன் அவ்வாறு ஏற்பாடுசெய்வீர்களென்றே நம்புகிறோம். எமது மித்திரன் வாசகர்களே! இம்மடாதிபதி இத்தென்னாட்டிலே தென்னாற்காடு ஜில்லாவிலே ஸ்ரீ விஜயீந்திரரின் பிருந்தா



வனத்தின் சமீபத்திலேதான் சஞ்சரிக்கிறார். ஆதலால் இதுசம்மந்தமான நற்செய்தியை அடுத்த மித்திரனில் கவனியுங்கள்.

---

# செய்தித்திரட்டு.

## ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகளின் சஞ்சாரம்.

ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகள் இங்கரைவிட்டு மன்னார்குடிக்குப் போய் தஞ்சாவூர்மார்க்கமாய் புதுக்கோட்டைக்கு விஜயம்செய்தனர். அங்கு ஸம்பிரதாயப்படி புதுக்கோட்டை ஸமஸ்தானத்தாலும் மாத்வப்ரமுகர்களாலும் மரியாதைகள் நடந்தன. அங்குள்ள ஸம்ஸ்கிருதகாலேஜ் தலைமை உபாத்தியாயரும் தானாதிகாரியுமான ஸ்ரீமான் காளிரங்காசாரியாரென்னும் விசிஷ்டாத்வைத பண்டிதர் இன்று அத்வைதத்தை அவைதிகமென்று சொல்லும் ஸ்ரீஸ்வாமிகள் நாளை விசிஷ்டாத்வைதத்தை அவைதிகமென்று சொல்லமாட்டாரா. இதை அடக்கிப்போடவேண்டுமென்று வெகு ஆடம்பரமான வியாஸங்களை புதுக்கோட்டை ஜனமித்திரனிலும் கும்பகோணம் ஆரியதர்மத்திலும் எழுதிக்கொண்டிருந்தார். அந்த வியாஸங்களைத்தாக்கி எழுதிய ஸ்ரீமான் N. சஞ்ஜீவராவ். M. A., L. T., முதலியவர்களையும் குறைத்துப்பேசியிருந்தார். ஸ்ரீஸ்வாமிகள் அவரை வரவழைத்து 28-4-31 வ யன்று அவருடன்பேசும்பொழுது அடியிற் கண்டவாறு ருசிகரமான ஸம்பாஷணை நடந்தது.

விஜ: ஆரியதர்மத்தில் ஸ்ரீஸ்வாமிகள் அத்வைதம் அவைதிகமென்று சொல்வது கூடாதென்று எக்காரணத்தைக்கொண்டு எழுதினீர்களோ?

ரங்கா: அத்வைதமும் வேதப்பிரமாணங்களுடன் கூடியது.

விஜ: அந்தவிஷயம் பிறகு விசாரிப்போம். உங்கள் பரமகுருவான ஸ்ரீமத் ராமானுஜாசாரியாள் அத்வைதம் பிரச்சன்ன பௌத்தமதமென்று தங்கள் நூலில் சொல்லியுள்ளாரா?

ரங்கா; ஆம் சொல்லியிருக்கிறார்.

விஜ: ஸ்ரீமத் ராமானுஜாசாரியார் பேதத்தைச் சொல்லியிருக்கிறாரா? அபேதத்தைச் சொல்லியிருக்கிறாரா?

ரங்கா: பேதத்தையே சொல்லியுள்ளார்.

விஜ: அப்படியிருக்க அத்வைதம் அப்ரமாணம்தானே?

ரங்கா: அப்படிச்சொல்லமுடியாது. அத்வைதத்திற்கும் பிரமாணங்கள் அநேகமிருக்கிறது.

விஜ: அதை பிரமாணமாக நீர் ஒத்துக்கொள்வீரா?

ரங்கா: அத்வைத மதசாஸ்திரரீதியில் அத்வைதம் பிரமாணம்தான்.

விஜ: அப்படியானால் பௌத்தமதப்படி பௌத்தமதம் பிரமாணம். அப்படியே எல்லாமதங்களும் ஒவ்வொன்றும் அந்தந்த சாஸ்திரரீதியில் பிரமாணங்கள்தான். ஆகவே எல்லாமதமும் பிரமாணமே.

ரங்கா: அப்படிச்சொல்லலாமா? அத்வைதமதமும் வைதிகமென்று வாதம் செய்யத்தயாராக இருக்கிறேன்.

விஜ: அப்படியானால் உங்களுடைய சிஷ்யர்களுக்கு நீர் பாடம்சொல்லும்பொழுது உங்கள் பரமாசாரியன் சொன்னதற்கு முரண்பாடாக அத்வைதம் பிரமாணம்தான். பேதமும் ஸத்யம் அபேதமும் ஸத்யம் அத்வைதம் பிரச்சன்ன பௌத்தமதமல்லவென்று சொல்லுவீரா?

ரங்கா: அப்படி நான் சொல்லமாட்டேன். **அத்வைதம் பிரச்சன்ன பௌத்தம்தான். பேதம் ஸத்தியமென்றே சொல்வேன்.**

விஜ: அப்படியாகில் இப்போது ஏன் இப்படி ஆர்யதர்மத்தில் எழுதினீர்கள்?

ரங்கா: "நான் அவ்விஷயங்களை வீட்டிலிருந்துகொண்டு கதவைத்தாப்பாள் போட்டுக்கொண்டு என்னுடைய சிஷ்யர்களுக்கு அத்வைதம் பிரச்சன்னபௌத்தம்தான். பேதம் ஸத்யம்தான் என்று சொல்லுவேன். ஆனால் நான் இந்த ஸமஸ்தானத்தில் தானாதிகாரியாய் இருக்கிறேன். அநேகம் பெயர்கள் ஸ்மார்த்தாள் என் சிநேகிதர்களாக இருக்கிறார்கள். ஆனதால் ஸபையில் வைதிகமென்றே வாதிக்க வேண்டியிருக்கிறது."

வாக்யார்த்தவிசாரம் வழக்கப்படி அப்பண்டிதருடன் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிகள் அங்கு 2—நாள் தங்கியிருந்து மானாமதுரை மார்க்கமாய் ராமேசுவரம் தனுஷ்கோடிபோய் ஒருவாரம் தங்கியிருந்து சுமார் 3000 ரூ. வரை விசேஷ பிராம்மண சந்தர்ப்பணை பூரி தக்ஷிணைகளைக்கொடுத்து சிலவுசெய்தார் ராமேஸ்வர தேவாலயத்தில் ஸர்வ தீர்த்தக்கரையில் ஸ்ரீஸ்வாமிகள் சம்பிரதாயப்படி பூஜையைநடத்தினார். அங்குதான் ஸ்ரீமத்வாசாரியார் சிருங்கேரி, மடாதிபதியை வாதத்தில்வென்றது. இந்த விஷயம் மத்வ விஜயத்தில் நன்கு கூறப்பட்டிருக்கிறது ஸ்ரீமத்வாசாரியாளின் நேரான கிளை இம்மடமாதலால் ஸ்ரீமத்வாசாரியாருக்கேற்பட்ட இம்மரியாதைகள் போன்ற பல ஸம்பிரதாயங்கள் இம்மடத்தாருக்குத்தான் ஏற்பட்டிருப்பதாய் சொல்லப்படுவதுண்டு, ராமநாதபுரம் மார்க்கமாய் மதுரைக்கு வந்துசேர்ந்தார். அங்கு ஸ்ரீமான் தேதியூர் சுப்பிரமண்யசாஸ்திரிகளுடன் 17, 18-உ களில் தத்வமஸி ஸம்மந்தமாய் வாதம்நேர்ந்தது. வாதமாரம்பமாகி ஒன்றிரண்டு கோடிகள் நடக்க ஸந்தியாவந்தனத்திற்கு நேரமாகிவிட்டதென்று சாஸ்திரிகள் எழுந்துவிட்டனர். இந் நகரில் நடந்ததுபோல் இரவு 9-மணிவரையில் நடக்கலாமென ஸ்ரீஸ்வாமிகள் சொன்னதற்கு மறுநாள் மத்யானம் சிருங்கேரிக்கு போகவேண்டியிருப்பதால் சில காரியங்களிருப்பதாகவும் மறு நாள்காலை வெகு சீக்கிரத்திலேயே வந்து வாதத்தை முடித்துக்கொள்ளப்போவதாயும் அறிவித்தார் மறுநாள் காலை சாஸ்திரிகள் வெகுநேரம்கழித்து வரவும் முதல்நாள் நடந்த வாதத்தின்பேரில் ஸ்ரீஸ்வாமிகள் ஆக்ஷேபணைசொல்லி அவைகள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டு கையொப்பமாகிமுடிய சுமார் 11½-மணி ஆக



சாஸ்திரிகள் இதற்கு பதில்சொல்லி எழுந்துபோவதாய் அறிவிக்க எத்தனை நேரமானாலும் தாம் ஆகாரமின்றி வாதமாடத்தயாரென்றும் சாஸ்திரிகள் ஏதோ பதில்சொல்லிவிட்டு நடுவில் எழுந்துபோய் ஸ்ரீஸ்வாமிகள் கேட்டதற்குசாஸ்திரிகள் பதிற்சொல்லிவிட்டதால் ஸ்ரீஸ்வாமிகளின்வாதம் நிலைநிற்கவில்லை என்னும் வதந்தியைகிளப்ப இடம்தராலாகாதென்றும் இருகக்ஷியாரும் ஓர் காலளவுக்குள் வாதம் செய்யவேண்டுமானால் அந்த காலநிர்ணயம் இப்போதேசெய்யப்பட்டு இன்றுமாலைமுதல் அந்த நிர்ணயப்படி வாதம் நடத்தப்படலாமென்றும் ஸ்ரீஸ்வாமிகள் வற்புறுத்த அதிக நேரமாகிவிட்டதால் கூட்டத்தில் ஓர் நிஷ்கரிஷையும் ஏற்படாமல் எல்லோரும் எழுந்துபோய்விட்டனராம். புதுக்கோட்டை, மதுரை, இவைகளுக்கு ஸ்ரீஸ்வாமிகள் செய்தவிஜயம். அங்கு நடந்தவாதம் இவைகளைப் பற்றி பல நிரூபங்கள் வந்திருக்கின்றன. தற்சமயம் மித்திரனில் இடமில்லாததால் அவைகள் பிரசுரிக்கப்படவில்லை. இப்போது ஸ்ரீஸ்வாமிகள் திருநெல்வேலியிலிருக்கிறார்.

---

# ஓர் எதிர்ப்பு.

## ஸ்ரீமான். B. N. கிருஷ்ணமூர்த்தி சர்மா B. A. Hons.

எழுதுவதாவது:—

---

பிரணம்ய ஸ்ரீமதானந்த தீர்த்தார்ய சரணாம்புஜம் |
காளி ரங்கார்ய விதுஷ: துருக்தீ: கண்டயாம்யஹம் ||
பாஷ்யே பிரஸன்ன கம்பீரே யோவித்வான் யத்னமாசரன்
நதத்போதகக்ஷமோ யாதி விதுஷாமுபஹாஸ்யதாம் ||

சென்ற ஏப்ரல்மீ 17ம் தேதி வெளிவந்த ஜனமித்திரனில் புதுக்கோட்டை சமஸ்தானம் தானாதிகாரிகளாய் விளங்காநிற்கும் காளி ரங்காசாரிய ரென்ற பேரறிஞர் த்வைதாத்வைத விஷயமாக வரைந்திட்ட ஓர் வியாசத்தைக் கண்ணுற்று நான்மிக வியப்புறுகிறேன். ஸ்ரீமத்வாசாரியாருடைய பாஷ்யத்தில் அத சப்தத்திற்கு மங்களம்தான் பொருள் என்று எழுதியிருப்பதாய் ரங்காசாரியாள் சிரமப்பட்டு ஓர் தோஷத்தைக்கண்டு பிடித்திருப்பதை சற்று விசாரிப்போம். ஸ்ரீமத்வபாஷ்யத்தை சரிவரப் படிக்காமல் அதனிடம் குற்றங்கூறுவது வித்வான்களுக்கு அழகல்ல. 'அத' சப்தத்திற்கு மங்களம்தான் பொருளென்று மத்வபாஷ்யத்தில் கூறுவதாகச்சொல்வது உண்மைகலவாத ஓர் அபாண்டமான பொய். அத சப்த: மங்களார்த்தோ அதிகாரானந்தர்யார்த்தஸ்ச, (மங்களம் என்ற பொருளிலும், பிறகு என்ற பொருளிலும் அத சப்தம் உண்டு) என்றுதான் ஸ்ரீமத்வாசாரியார் கூறுகிறார்.

தவிரவும் "அத சப்தத்திற்கு பிறகு என்று அர்த்தம்தான் காவியங்களிலும், புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் பிரஸித்தம்" என்றும் "மற்ற இரண்டு மதஸ்தர்களும் மோக்ஷ இச்சை பிறந்த பிறகுதான் பிரம்மத்தையறிய முயலவேண்டும் என்று பிறகு என்ற பொருளையே எழுதியிருக்க, ஒருவர்மாத்திரம், பிரசித்தியில்லாததாயும், பிரயோகங்களில்லாததுமான மங்களம்தான் பொருள் என்று எழுதியிருக்கிறார்கள்" என்று வாய்க்குவந்தபடி எழுதுகிறார். ஸ்ரீமத்வர் மோக்ஷ இச்சை பிறந்தபிறகுதான் பிரம்மத்தையறிய முயலவேண்டுமென்று, ஆபிரம்மஸ்தம்பபர்யந்தம் அஸாரம் சாப்யனித்யகம் விக்யாய ஜாதவைராக்ய: விஷ்ணு பாதைகஸம்சிரய: பரீக்ஷ்ய லோகான் கர்மசிதான் நிர்வேதமாயாத் என்று மேற்கோள்களுடன் காட்டியிருப்பதை ஸ்ரீமான் ஆசாரியர் கவனித்துணர்வாராக.

அத சப்தத்திற்கு மங்களம் என்ற பொருள் அப்ரசித்தமென்ற ரங்காசாரியரின் கூற்று ஹாஸ்யாஸ்பதமாகவேயிருக்கிறது. அப்பிரசித்தமென்றால் அவ்வித அருத்தமேயில்லையென்று தாத்பரியமா அல்லது அவ்விதப்பொருளிருப்பதை இந்தபண்டிதப் பிரகாண்டர் அறியார் என்று தாத்பர்யமா? அத சப்தத்திற்கு மங்களம் என்ற அருத்தமுண்டென இவர் இதுவரையறியாதது ஸ்ரீமத்வாசாரியருடையவும் சிறியோனாகிய என்னுடையவும் குற்றமும் ஆகாது. சகல காவ்ய புராண சாஸ்திரங்களையும் கரைகடந்தவர்போல் "பிறகு என்ற அருத்தம் தான் புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் பிரஸித்தம்" என்று எழுதுவது அறியாமையின் கூற்றே. 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு" என்பதையும், நஹிஸர்வ: ஸர்வம் ஜானாதி" என்பதையும், மறந்து கண்டபடி எழுதுவதினால் யாதுபயன் அத சப்தத்திற்கு பிறகு என்று தான் அருத்தமென்று எந்த கோசத்தினின்றும் ஸ்ரீமான் ஆசாரியர் கண்டுபிடித்தாரோ? சிறுவர்களும் கற்கும், அமரகோசம் நானார்த்த வர்க்கத்தில்— மங்களானந்தராரம்ப பிரச்னகார்த்ஸ்னி யேஷ்வதோ அத" என்று 'அத' சப்தத்திற்கு ஐந்து பொருள்களைக்கூறி அவற்றில் மங்களத்தையும் ஒன்றாகக்கூறியிருப்பதை இவர் மறந்தனரோ, அறிந்திலரோ?

மேலும் சங்கரபாஷ்யம், ஆனந்தகிரீயம், பாமதீ, ரத்னப்பிரபா, முதலிய கிரந்தங்களிலும் விசிஷ்டாத்வைத பாஷ்ய வ்யாக்யானமான, தத்வடீகை, சுருதப்பிரகாசம், முதலியவற்றிலும் விக்யான பாஷ்யாதிகளிலும் அத சப்தத்திற்கு மங்கள சூசகத்வமுண்டென்றும், உச்சாரண மாத்திரத்தினாலேயே அதசப்தம்



மாங்களிகமென்றும் சங்கஸ்வநாதிவத் ச்ரூயமணோ அத சப்த: மங்களாவஹ: || அதசப்த: சுருத்யைவ மங்களப்ரயோசனோ பவதி, என்று பலவிதமாக நிரூபிக்கப்பட்டிருப்பதை ஸ்ரீமான் ரங்காசாரியர் கவனிப்பாராக.

'அத' சப்தத்திற்கு மங்கள சூசகத்வமுண்டென்று ஸ்ரீமத்வபாஷ்யத்தில் அநேக புராணவாக்கியங்களை உதாஹரித்திருப்பதை காளிரங்காசாரியர் அறிந்திருந்தும், புராணங்கள் இவ்வித அருத்தம் இல்லையென்று எப்படிச்சொல்லக்கூடும்? அப்படியன்றி, மத்வபாஷ்யத்திய வாக்யங்கள் அப்பிரசித்தமென்று கூறுவாரேயானால், பாமதீ, இரத்தினப்பிரபா, ஆனந்தகிரீயம், தத்வடீகை, சுருதப்பிரகாசம், விக்யானபாஷ்யம் முதலிய பற்பல கிரந்தங்களில் உதாஹரிக்கப்பட்டதும் ஸ்ரீமத்வர்கூறிய வாக்யங்களின் பொருள் கொண்டதுமான:—

ஓங்காரஸ் சாதசப்தஸ்ச துவாவேதௌ பிரம்மண: புரா
கண்டம் பித்வா வினிர்யாதௌ தஸ்மான் மாங்களி காவுபௌ ||

என்ற சுலோகத்தையுதாஹரித்து, இனியேனும் சரிவர யோசிக்காமலும், மமதையினாலும், துராக்கிரஹத்தினாலும் சாமான்ய ஜனங்களை ஏமாற்ற, ரங்காசாரியர்போன்ற புலவர்கள் முன்வரமாட்டாரென்ற நம்பிக்கையுடன் இவ்வியாசத்தை முடித்துக்கொள்ளுகிறேன். [இது சம்மந்தமாய் புதுக்கோட்டை ஜனமித்திரனுக்கு அனுப்பப்பட்ட நிரூபம் அதில் பிரசுரிக்க மறுதளிக்கப்பட்டு வாபீஸ் வந்துவிட்டதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ப—ர்)]

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 5—6—31. | சுக்ரவாரம் | சிரவண உபவாஸம் விஷ்ணுபஞ்சக உபவாஸமுண்டு, |
| 12—6—31. | சுக்ரவாரம் | ஏகாதசி. |
| 14—6—31. | சனிவாரம் | ஸ்ரீவிஜயீந்திரரின் புண்யதினம். |
| 15—6—31. | சோமவாரம் | அமாவாசை, தர்ப்பணம், அசுவத்தபிரதக்ஷிணம். |
| 16—6—31. | மங்களவாரம் | விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| 26—6 31. | சுக்ரவாரம் | ஏகாதசி. |
| 29 6—31. | சோமவாரம் | விஷ்ணுபஞ்சக உபவாஸம். |

# மகத்தான விற்பனை விளம்பரம்.

## மாத்வமித்திரன்.

**முதல் வாலியம்:**—இதில் ஜகத்சிருஷ்டியின் காலம் காரணம் வகைகள் முதலியவை பகவானுடைய வ்யூஹாவதாரங்கள் அவதாரங்கள் பகவத் ஆவேசம் பெற்றவர்களின் ஜாபிதா. தேவர்கள் தேவஸ்திரீகள் இவர்களின் பிரதிபிம்பபாவம், குணங்களின் சங்கியை, தாரதம்மிய விவரம், பஞ்சபேதம், பக்தியின்பெருமை, பக்தர்களின் மகிமை உபாஸனை கிரமம், மோக்ஷத்தின் பிரகாரம், சற்குருவின் லக்ஷணம், பீமசேனருக்கு அதிகபலமிருந்ததின் காரணம், வாயுபகவானின் மேன்மை. பலித்தா சூக்தத்தின் அர்த்தம், மத்வமதத்தின் சிறப்பு, வேதத்தின் அநாதி அபௌருஷேயம், வர்ண நித்யத்வ வாதம். ஸ்ரீவேதவியாஸரின் வரலாறு, ஸ்ரீவாயு ஸ்துதியின் சரியான மொழிபெயர்ப்பு, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் அற்புதச்செயல்கள், ஸ்ரீமத்வாசாரியார், ஸ்ரீஜயதீர்த்தர், ஸ்ரீபுரந்தரதாஸர் இவர்களின் ஜீவிய சரித்திரம், ஸ்ரீகிருஷ்ணரின் கைலாஸ யாத்திரை, சந்திரஹாஸ சரித்திரம் முதலிய ரஸமான கதைகள், ஸந்தியாவந்தன மந்திரங்களின் அர்த்தம். பிஷ்டபசுவிசாரம் முதலிய அரியபெரிய விஷயங்களடங்கியது. சுமார் 120 பக்கங்களைக்கொண்டது சொற்ப காப்பிகள்தான் பாக்கி. இதன் விலை ரூ. 4—0—0.

**இரண்டாவது வாலியம்:**—இதில் பிரம்மாண்டத்தின் உற்பத்தி லயத்தின் பிரகாரம், வராஹாதி அவதாரங்களின் சரிதை, ராவணாதிகளின் உற்பத்தி, யுகங்களின் பரிமாணம், தசரதனின் பூர்வ விருத்தாந்தம், தேவர்களின் அம்சங்கள்பெற்ற வானரங்களின்விபரம், ஹரிஹரர்களின் யுத்தம், அதில் ஸ்ரீஹரியின் வெற்றி, ராமரும் பரசுராமரும் ஐக்யமானது கூனியின் வரலாறு, சூரங்காசுர வதம், மகாலட்சுமியின் லீலை, சீதை கைலாஸம்சென்ற விருத்தாந்தம், ஹரி வாயுக்களின் நட்பு, வாலியின் பக்தியும் மரணமும், ஹனுமாரின் பராக்கிரமம், வேதப்பிராமாண்யவாதம், வேதாபௌருஷேய வாதம் வேதவிஷயமான பல அரிய நிரூபங்கள். சார்வாகமத கண்டனம், பரமாணுவாதம், போஜன பதார்த்தங்களிலும் அன்னமயாதி கோசாதிகளிலுமிருக்கும் பகவத் ரூபங்களின் சங்கியையும் விபரமும், ஸாலக்கிராமத்தின் மகாத்மியம், தத்வமஸி வாக்ய விமரிசை, ஸ்ரீராகவேந்திரர், ஸ்ரீகோபாலதாஸர் சரித்திரம் முதலிய எண்ணிறந்த விஷயங்கள் நிறைந்துள்ளது சுமார் 160 பக்கங்களைக்கொண்டது. இதன் விலை இனி ரூ. 4—0—0.

இவ்வருடத்திய சந்தாதாரர்களுக்கு மட்டில்

1 & 2 வாலியம் சேர்ந்து ... ... ரூ. 5—0—0 தான்
1 வாலியம் மட்டில் ... ... ... ரூ. 3—0—0
" ... ... ... ரூ. 3—0—0

மானேஜர் மாத்வமித்திரன் ஆபீஸ்.
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வ மதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாரராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! பாதிவிலை!!

## சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

### அபூர்வ நாடகங்கள்.

துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கனுதாசாரியார் ஆசிரியர்) 0—6—0
உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால
செட்டியார் பதிப்பாசிரியர் 0—4—0
சக்குபாய் ஷை. 0—4—0

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பெரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ. 4—8—0

ஆன்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர் டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S.India.)

# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி

## கும்பகோணம்.

| | |
|---|---|
| ஸ்தாபிதம் | தந்திவிலாஸம் |
| 1909 | “கோகுல்” |

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்கு தயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறிஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள். |

சந்தனாதித் தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்

Printed at Sri Venkateswar Printing works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.